# தமிழர் பொருண்மியம்

வாரமலர்


TAMILS ECONOMY


விலை - 100/=

இதழ் - 76


22.09.2024

## காட்டுக்கந்தோரும் வெளவால்களின் கச்சேரியும்....






வாடகை வருமான வரி 10


மாதச் சம்பளம் வாங்குபவர்கள் செய்யும் நிதித் தவறுகள்! 15





கால்நடை வளர்ப்பில் சாதிக்கும் இளைஞன் 17

# ஒரு நிலம், இரு வருமானம்



வேதநாயகம் தபேந்திரன்



**பாரிய கட்டிடம் மேல் சூரியசக்தி மின்கலங்கள் பொருத்தப்படும் போது கட்டிடம் பெறுமதி உள்ள வேறு ஒரு வளமாகப் பயன்படுகின்றது. ஆனால் நிலத்தின் மேல் கூரை அமைக்கப்படும் போது கூரையின் கீழ் உள்ள நிலமும் வருவாய் ஈட்டக் கூடியதாக மாற்றப்படல் வேண்டும். இல்லையேல் நிலம் வெறுமனே இருந்தால் அது தேசிய பொருளாதாரத்திற்கு விரயத்தை ஏற்படுத்தும் ஒன்றாகி விடும்.**

சூரியசக்தி மூலமாக மின்சாரம் பெற்று வீட்டுப்பாவனையுடன் அரசாங்கத்துக்கு விற்றல், அரசாங்கத்துக்குப் பெரிய அளவில் விற்றல் ஆகிய நடவடிக்கைகள் எமது நாட்டில் பரவலாக நடைபெறுகின்றன.

வீடுகளின் கூரை மேல் சூரிய சக்தி மின்கலங்களைப் பொருத்தும் போது மின்னுற்பத்தி மூலமாக தேசிய மின் கட்டமைப்புக்கு மின்சாரம் சேருகின்றது. அதே வேளையில் எமக்கும் வருமானம் கிடைக்கின்றது.

வீட்டுக் கூரையின் வெப்பமுறுதல் குறைக்கப்படுகின்றது. மின்சாரத்தை விற்று வருவாய் ஈட்டிக் கொள்கின்றனர். இது நல்ல வருவாய் தரும் ஒரு தொழிலாகும்.

200 முதல் 300 ,400 வரையான கிலோ வாற்ஸ் மின் உற்பத்திகளை மேற்கொள்ளும் மெகா திட்டங்களும் பரவலாகி வருகின்றன. அப்போது பெரியதொரு நிலப்பரப்பில் தூ ண்கள் நிறுத்தியோ அல்லது கேடர்களைப் பொருத்தியோ கூரை அமைத்துக் கொள்கின்றனர்.

அதன் கூரைமேல் சூரியசக்தி மின்கலங்களைப் பொருத்துகின்றனர். தனியாக ஒரு மின்மாற்றியை அமைத்து மின்சாரத்தை இலங்கை மின்சார சபைக்கு விற்று வருமானம் ஈட்டிக் கொள்கின்றனர்.

இம்முறையில் பாரியதொரு நிலப்பரப்பின் மேலாக கூரை அமைக்கப்பட்டு அல்லது பாரியதொரு கட்டிடம் அமைக்கப்பட்டு மின் உற்பத்தித் திட்டம் நடைபெறுகின்றது.

பாரிய கட்டிடம் மேல் சூரியசக்தி மின்கலங்கள் பொருத்தப்படும் போது கட்டிடம் பெறுமதி உள்ள வேறு ஒரு வளமாகப் பயன்படுகின்றது.

ஆனால் நிலத்தின் மேல் கூரை அமைக்கப்படும் போது கூரையின் கீழ் உள்ள நிலமும் வருவாய் ஈட்டக் கூடியதாக மாற்றப்படல் வேண்டும். இல்லையேல் நிலம் வெறுமனே இருந்தால் அது தேசிய பொருளாதாரத்திற்கு விரயத்தை ஏற்படுத்தும் ஒன்றாகி விடும்.

பயிர்ச் செய்கை செய்யும் வளமான நிலங்கள் பல தரிசாக விடப்படுவதனைப் பரவலாகக் காணமுடிகின்றது.

இத்தகைய நிலங்களை எவ்விதம் பயன்பாட்டுக்கு உட்படுத்தலாம்.

01. காளான் வளர்ப்பு.

காளான்கள் நிழலில் தான் வளரும் தன்மை உடையவை. வெய்யிலில் அவை பொசுங்கிப் போய் விடும். அதனால் காளான் வளர்ப்பைச் செய்து நிலத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

காளானில் தயாரிக்கப்படும் உணவு வகைகள் இலங்கையராலும் உல்லாசப் பயணிகளாலும் விரும்பி உண்ணப்படுகின்றன.

இலங்கையில் பல்தேசியக் கம்பனிகளால் இயக்கப்படும் சுப்பர் மாக்கெற்றுகளுடன் ஒப்பந்தம் செய்து காளான் விற்பனையைச் செய்து கொள்ளலாம்.

உற்பத்தியின் தரம்,சுகாதார முறைகள் என்பறை சரியாக இருக்க வேண்டும்.

02. நிழலில் வளர்த்து உண்ணக் கூடிய மரக்கறிப் பயிர்வகைகள்,பழ வகைகள் தொடர்பான தேடல்களில் ஈடுபடல் வேண்டும். குறிப்பாக குளிர்வலய நாடுகளில் எவ்விதமாக நிழல் உற்பத்திகள் நடைபெறுகின்றன எனும் தகவலைப் பெறல் வேண்டும்.

விவசாயத்துறைசார் வல்லுநர்கள் நிழல் பயிர்ச் செய்கை தொடர்பான வழிகாட்டுதல்களைச் சமூகத்துக்கு வழங்குதல் வேண்டும்.

03. கோழிவளர்ப்பை மேற்கொள்ளலாம். சண்பவர் லங்கா எனும் தனியார் கம்பனி தலா 30 இலட்சரூபா பெறுமதியான வீடுகளை வட மாகாணத்தில் அன்பளிப்பாகக் கட்டி வழங்க உள்ளது.

ஒவ்வொரு வீட்டுக்கும் பதிலாக அரசாங்கம் 20 கிலோவாற்ஸ் சூரிய சக்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான நிலத்தை அரசாங்கம் வழங்க வேண்டும். முதல் கட்டமாக மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வெற்றிலைக் கேணி பிரதேசத்தில் 03 ஏக்கர் அரசகாணி சண்பவர் லங்கா நிறுவனத்திற்குக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட உள்ளது.

குறித்த நிறுவனம் அந்ம நிலப்பரப்பு முழுவதும் கூரை அமைத்து கூரியசக்தி மூலமான மின்சார உற்பத்தியைச் செய்து அரசாங்கத்திற்கு விற்பனை செய்ய உள்ளது.

பாரிய கூரையின் கீழ் வரும் 03 ஏக்கர் நிலப்பரப்பிலும் கோழிப்பண்ணையை அமைக்க உள்ளது. அந்தக்கோழிப்பண்ணை வருமானத்தைக் குறித்த நிறுவனமே எடுத்துக் கொள்ளும்.

அது போல எம்மவரும் மெகா சூரியசக்தி மின்கலங்களை நிறுவும் போது வரும் நிலப்பரப்பில் கோழிப்பண்ணை



அமைக்கலாம். மிகச் சிறந்த திட்டமிடல்இமிகச் சிறந்த பராமரிப்பு இருந்தால் கோழிப்பண்ணை நல்லதொரு வருமானம் ஈட்டும் தொழிலாகும்.

04. கடைகள்அமைத்தல், களஞ்சியங்கள் அமைத்தல்.

நகரம் சார் பிரதேசத்தில் கடைகள், களஞ்சியங்களை அமைத்த பின்பாக அதன் கூரைகளை சூரியசக்தி மின்கலங்கள் பொருத்த உபயோகிக்கலாம்.

அல்லது தனியார் கல்வி நிலையங்கள் அமைக்கலாம்.

05. கிராமப் புறங்களாயின் ஆடுகள்அல்லது மாடுகள் வளர்க்கும் கால்நடைப்பண்ணைகளாகப் பாவிக்கலாம். பொருத்தமான சூழல்,சட்டதிட்டங்கள் சரியாக அமையுமாயின் கால்நடை வளர்ப்பு வெற்றிகரமான ஒரு தொழிலாகும்.

பயிர்ச் செய்கையை விட மின் உற்பத்தி மூலமாக மிக மிக அதிகமான இலாபமீட்டலாமெனப் பலரும் மெகா சூரியசக்தி மின் உற்பத்தில் திட்டத்தில் இறங்கி விட்டனர். அதனால் வளமுள்ள மண் உற்பத்தியில் ஈடுபடாமல் வீணாகிப் போவதனை விட முடியாது.

இதனைத் தடுக்கச் சமூகப் பொறுப்புள்ள ஒவ்வொரு பிரசையும் மாற்றுத் திட்டங்களை வைத்திருக்க வேண்டும்.

அரசாங்கமும் இது குறித்த அக்கறையை எடுத்தல் வேண்டும்.

இல்லையேல் மின்சாரத்தில் தன்னிறைவு கண்டுவிட்டு வெளிநாடுகளிலிருந்து பலமடங்கு விலையில் உணவை இறக்குமதி செய்ய வேண்டி வரும்.

தமிழர் பொருண்மியம் உயர நிலம் மீதான அக்கறையும் உற்பத்தியும் மிகச் சரியாகத் திட்டமிடல் வேண்டும். நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

இது காலத்தின் கட்டாயத் தேவையாகும்



மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0777304010 / 0702675575

## பொருளாதாரமும் புதிய ஆட்சியும்

ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று, புதிய ஆட்சி ஒன்று பொறுப்பேற்க உள்ள நிலைமையில் பொருளாதாரம் தொடர்பாக அவர்களுடைய கவனம் எந்த அளவுக்கு இருக்கப்போகின்றது என்ற கேள்வி முக்கியமாக எழுகின்றது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒரு ஆட்சி மக்களால் விரட்டி அடிக்கப்படுவதற்கு பொருளாதார நெருக்கடி காரணமாக இருந்தது. ஆனால் ஜனாதிபதி தேர்தலின் போது பொருளாதாரம் என்பது முக்கிய பேசு பொருளாக இருக்கவில்லை. தனிப்பட்ட தாக்குதல்கள் அதிகளவுக்கு இருந்ததை அவதானிக்க முடிந்தது.

இரண்டு வருடங்களுக்கு ஒரு இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க இருந்த காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடி ஓரளவுக்கு முடிவுக்கு கொண்டு வரப்பட்டிப்பதாக கூறப்படுகின்றது. ஆனால் இது நிரந்தரமான ஒரு தீர்வு என்று கூற முடியாது. வெளிநாட்டு கடன் உதவிகளின் மூலமாக மக்கள் எதிர்கொண்ட பல்வேறு நெருக்கடிகளுக்கு தீர்வு காணப்பட்டது. உல்லாச பயணிகளின் வருகை ஓரளவுக்கு அதிகமாக இருந்ததால் அதன் மூலமாகவும் கணிசமான அந்நியச் செலாவணி கிடைத்தது.

கடந்த காலங்களில் காணப்பட்ட இந்த நிலைமையை மட்டும் கருத்தில் கொண்டு பொருளாதார நெருக்கடி தீர்க்கப்பட்டு விட்டது என்று கூற முடியாது. இதற்கு குறுகிய கால மற்றும் நீண்ட கால திட்டங்கள் அவசியம். கடன்களை வாங்கி மட்டும் நெருக்கடிகளை தீர்த்துவிட முடியாது. அது நாட்டையும் மக்களையும் மேலும் கடன் பொறுப்பில் சிக்க வைப்பதாக மட்டுமே இருக்கும்.

அந்நியச் செலவாணியை அதிக அளவுக்கு பெற்றுக் கொள்வதற்கு எவ்வாறான திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டும்என்பதற்கு பொருளாதார நிபுணர்களின் ஆலோசனை பெறப்படுவது அவசியம். வெறுமெனே தேர்தலுக்காக கணக்கு காட்டுவதும் மக்களுடைய ஆதரவை பெற்றுக் கொள்வதற்கான சில செயல்பாடுகளும் மட்டும் பொருளாதார நிலைமையை சீராக்கி விடாது.

உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் அதன். மூலம் ஏற்றுமதி வருவாயை பெருமளவுக்கு பெறக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும். புலம்பெயர்ந்து உள்ள தமிழ் மக்கள் அச்சமின்றி நம்பிக்கையுடன் முதலீடு செய்யக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும். கடந்த காலங்களில் இதற்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தாலும் கூட, நம்பிக்கையுடன் முதலீடு செய்யக்கூடிய நிலைமையில் ஈழத் தமிழர்கள் இருக்கவில்லை. அதற்கான காரணம் சொல்லத் தேவையில்லை.

கடந்த காலத் தவறுகள் களையப்பட வேண்டிய காலம் இது. பொருளாதார நெருக்கடி ஏன் ஏற்பட்டது, அதற்கு காரணமானவர்கள் யார் என்பது கண்டறியப்பட்டு, அவர்கள் உரிய முறையில் கையாளப்படுவதும் அவசியம். இதனை செய்வதன் மூலமாகத்தான் புதிய ஆட்சியில் பொருளாதாரத்தை செழிப்புறச் செய்ய முடியும்.!

# கம்பு கை கொடுக்கும்

க .அமுதன்– கீரிமலை

சிறுதானியங்கள் எப்போதும் உடலுக்கு ஆரோக்கியமானவை அந்த



வகையில் கம்பு உடலுக்கு அத்தனை நன்மைகளை கொடுக்கின்றது கம்பு கை கொடுக்கும் என்று முன்னாள் மிக அழகாக சொல்லி இருக்கிறார்கள், அரிசி கோதுமை ஆகிய இரண்டும் உலகளவில் அதிக மக்களால் உண்ணப்படும் தானியங்களாக இருக்கின்றன. இவை போலவே பல சத்துக்கள் நிறைந்த உணவாக உட்கொள்ளக்கூடிய சிறு தானியங்கள் பல இருக்கின்றன. அதில் ஒன்று தான் “கம்பு”. இந்த கம்பை கூழ், களி, அடை, தோசை, முளைவிட்ட பயிர் என எந்த வகையிலும் பக்குவப்படுத்தி சாப்பிடலாம். கம்பு உணவாக உட்கொள்வதால் நமக்கு ஏற்படும் நன்மைகளை இங்கு அறிந்து கொள்ளலாம்.

## கம்பு பயன்கள்

### உடல் பலம்

கம்பு பல அத்தியாவசிய சத்துகள் நிறைந்த உணவாகும். இதை தினந்தோறும் காலையில் கூழ் அல்லது களியாக சாப்பிட்டு வந்தால் உடலில் கெட்ட கொழுப்புகள் தங்குவதை தடுத்து, தசைகளுக்கு நல்ல இறுக்கத்தை தந்து, உடல் பலத்தை பெருக்கும்.

### நீரிழிவு

நீரிழிவு நோய் தாக்கம் கொண்டவர்கள் சர்க்கரை சத்துக்கள் அதிகமுள்ள அரிசி போன்றவற்றை சாப்பிடமுடியாது. அந்த அரிசிக்கு மாற்றாக தினமும் கம்பு கூழ், களி, தோசை போன்றவற்றை செய்து சாப்பிடுவது அவர்களின் ஆரோக்கியத்திற்கு சிறந்தது. இழந்த உடல்சக்திகளை மீண்டும் தர வல்லது இந்த கம்பு.

நோய் எதிர்ப்பு:சிறுதானியமான கம்பில் பல உடலுக்கு தேவையான சத்துகளும், வேதிப்பொருள்களும், வைட்டமின்களும் நிறைந்துள்ளன. இந்த கம்பை தொடர்ந்து உணவாக கொள்பவர்களுக்கு உடலில் நோயெதிர்ப்பு திறன் மேம்பாட்டு உடலை பல நோய்களின் தாக்கத்திலிருந்து காக்கிறது.

### நார்சத்து

நாம் உண்ணும் உணவுகள் அனைத்தும் எளிதில் செரிமானம் அடைய வேண்டும். கம்பு நார்சத்து அதிகம் கொண்டதால் வயிற்றில் செரிமான கோளாறுகள் மற்றும் புண்கள் கொண்டவர்கள் தொடர்ந்து சில காலம் உண்டு வருவதால் வயிறு சம்பந்தமான அத்தனை குறைபாடுகளையும் நீக்கும்.

தொடர்ச்சி 14 ம் பக்கம்...




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 2,04,400 ரூபா.**

**24 கரட் தங்கம் 2,23,000 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** ஸ்டார்ட்அப் தொழில் ஒன்றை அமைப்பதன் மூலமாக வெற்றிபெற முடியுமா? பெண்களுக்கு இது எந்தளவுக்கு சாத்தியமாது?

**எம்.பிரியதர்ஷினி,**
**மன்னார்.**

**பதில் -** இன்றைய காலகட்டத்தில் முக்கியமான ஒரு கேள்வி. சமூக, பொருளாதாரப் போக்கை தீர்மானிக்கும் காரணியாக ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் உருவெடுத்து வருகின்றன. ஆரம்பத்தில் இவ்வாறு ஒரு முறையில் ஆர்வம் குறைவாகவே இருந்தது. ஆனால் அண்மைக் காலங்களில் அதிகமானவர்கள் இவ்வாறான முதலீடுகளைச் செய்வதிலும், அவற்றை திட்டமிட்ட முறையில் வெற்றிகரமாக முன்னெடுப்பதையும் காணமுடிகின்றது.

இதுவரையில் நாம் கடைபிடித்துவந்த தொழிற்செயல்பாடுகள் ஸ்டார்ட்அப் யுகத்தில் பெரும் மாற்றத்துக்கு உள்ளாகி வருகின்றன. தொழில் முனைவோர்கள் இந்த மாற்றத்தை உணர்வதும், இந்த மாற்றத்துக்கு ஏற்ப தங்களை தகவமைத்துக் கொள்வதும் அவசியம்.

Start up என்றால் தொடக்க நிலை. அதாவது நீங்கள் ஒரு செயலை செய்யத் தொடங்குகிறீர்கள். அது கல்வியாகவோ வேலையாகவோ அல்லது சுயதொழிலாகவோ இருக்கலாம். எதுவானாலும் அதில் உங்களால் மேற்கொள்ளப்படுகின்ற ஆரம்ப முயற்சியையே start up என்று குறிப்பிடுகின்றனர்.

ஸ்டார்ட்அப் சிந்தனை என்பது தொழில் சார்ந்த ஒன்று மட்டுமல்ல, எந்த ஒரு விஷயத்திலும் தீர்வு நோக்கி சிந்திக்கும் அணுகுமுறை அது. நம் சமூகத்தில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளுக்கு ஸ்டார்ட்அப் அணுகுமுறை மூலம் தீர்வு காண முடியும்.

எனவே, தொழில் முனைவோர் என்றில்லை, மாணவர்கள், ஊழியர்கள், சமூகச் செயல்பாட்டாளர்கள் என ஒவ்வொருவரும் இந்தக் காலகட்டத்தில் ஸ்டார்ட்அப் சிந்தனையை கைகொள்வது அவசியம்.

வடக்கு கிழக்கில் பல பெண்கள் தனியாக அல்லது, குழுவாக இணைந்து பல புதிய தொழில்முயற்சிகளை அடையாளம் கண்டு அவற்றை துணிச்சலுடன் ஆரம்பித்து செயற்படுத்திவருகின்றார்கள். நீங்கள் வசிக்கும் மன்னாரில் கூட அவ்வாறு பல பெண்களைக் காணலாம்.

தற்போதைய சூழலில், சந்தைப்படுத்தல் என்பது மிக முக்கியமானதாக மாறியுள்ளது. நம் செயல்பாடுகளை, உருவாக்கங்களை, திறன்களை மிகச் சரியான முறையில் சந்தைப்படுத்த கற்றுக்கொள்ள வேண்டும். அனைத்துக்கும் மேலாக, வற்றாத தேடல் அவசியம். தேடலே நம்மை உயிர்ப்போடு வைத்திருக்கும்!

சரியான ஒரு துறையை அடையாளம் காணுங்கள். அதற்கான சந்தை வாய்ப்பை ஆராயுங்கள். அதற்கான மூலப் பொருட்கள், தேவையான மனித வளங்கள் கிடைக்கக்கூடியதாக உள்ளதா என்று பாருங்கள். சின்னச் சின்ன றிஸ்க் இருக்கத்தான் செய்யும். அதனைச் சமாளிப்பதற்கான திட்டமிடலுடன் துணிச்சலாக இறங்குங்கள். வெற்றி உங்களுக்குத்தான்.

**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருண்மியம்,**
**கிறீன் மீடியா ஹவுஸ்,**
**68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.**
**என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**
**வாட்ஸ் அப் முகவரி +94 777 304010**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 240/= |
| உருளைக்கிழங்கு | 220/= |
| பச்சை மிளகாய் | 200/= |
| தக்காளி | 230/= |
| மரவள்ளிக்கிழங்கு | 26180/= |
| கோவா | 250/= |
| கரட் | 250/= |
| வாழைக்காய் | 200/= |
| சின்ன வெங்காயம் | 240/= |
| பாகற்காய் | 350/= |
| வெண்டிக்காய் | 120/= |
| பயற்றங்காய் | 160/= |
| பீற்றூட் | 80/= |
| முருங்கைக்காய் | 300/= |
| தேங்காய் | 130/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 201/= |
| கனடா டொலர் - | 218/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 331/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 229/= |
| ஸ்ரேர்லிங் பவுண் - | 393/= |
| சுவிஸ் பிராங் - | 349/= |
| அமெரிக்க டொலர் - | 299/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 211/= |
| கனடா டொலர் - | 228/= |
| சீன யுவான் - | 44/= |
| யுரோ - | 344/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 240/= |
| ஸ்ரேர்லிங் பவுண் - | 400/= |
| சுவிஸ் பிராங் - | 409/= |
| அமெரிக்க டொலர் - | 309/= |



# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

ஆக்கள் வந்து இருக்கிறது இருக்கமுதலே உந்தத் தேத்தண்ணி கதையைத் துடக்கிறது.

இனி அவவின்ரை கதையைக் கேட்டவைதேத்தண்ணி குடிக்காம வந்தாலும் சாச்சாய்... இப்பதான் குடிச்சுப்போட்டு வாறம் எண்டு மனசுக்கை வீட்டம்மாவைத் திட்டினபடியே சொல்லுவினம்.

எங்கட ஆச்சியும் முந்தி உப்பிடித்தான் சும்மா சும்மா தேத்தண்ணி குடிக்க கோப்பி குடிக்க எண்டு வீட்டை வாறவைக்கு அடி பிள்ளை தேத்தண்ணி கோப்பி கண்டபடி குடிச்சால் கண்ட கிண்ட வருத்தமும் வருமாம் எண்டு அவையை ஒரு வழி பண்ணிப் போடுவா.

அவன் வந்த பெடியும் ஓம் அன்ரி இப்பதான் குடிச்சுப்போட்டு வந்தனான்

வீட்டம்மா இண்டைக்கு விடியக் காலமையே வெகுண்டெழுந்து விட்டா. வேறை ஒண்டுமில்லை காலமை இன்சூரன்ஸ் செய்யிற பெடி ஒண்டு வீட்டை வந்தது. இனி அவன் வந்த உடனை வீட்டம்மா வா தம்பி இரு. தேத்தண்ணி குடிச்சுப்போட்டுத்தானே வந்திருப்பியள் எண்டா.

பேந்தும் ஒருநாளைக்கு ஒருக்காத் தேத்தண்ணி குடிச்சாக்காணும்.ரெண்டு மூண்டு தரம் தேத்தண்ணியைக் குடிச்சுப்போட்டுப் பேந்து சுகர் கொலஸ்டரோல் எண்டு அவதிப்பட்டு டாக்குத்தர் மாருக்கு அள்ளிக்கொட்ட வேணும் எல்லே எண்டா.

இப்ப சீனி விலை கூடின பிறகு பால்மாவுக்குத் தட்டுப்பாடு வந்த பிறகு விலை கூடின பிறகு வீட்டம்மா எடுத்த ராஜதந்திர நகர்வு தான் உப்பிடி எண்டு சொன்னாலும் அவன்ரை முகத்தில வீட்டம்மா தப்பித்தவறி தேத்தண்ணி தரமாட்டாவோ எண்ட நப்பாசை எட்டிப் பாத்தது.

அவனைப் பாத்தா எலக்சினிலை தோப்பம் எண்டு தெரிஞ்சும் என்ன செய்யிறது எண்டு தெரியாம எலெக்சன் கேக்கிறவன்ரை ஒரு தவிப்புத் தெரிஞ்சுது. சரி... வந்த பெடியை என்னடா மோனை என்னத்துக்கு வந்தனி எண்ணவும் ஓம் அங்கிள் உங்களுக்கு ஒரு லைப் இன்சூரன்ஸ் போடலாம் எண்டு வந்தனான் எண்டான்.

நான் உடனை அதென்னடாப்பா எண்ணவும் அவன் நீங்கள் அங்கிள் இப்ப ஏ 9 இல மோட்டச்சயிக்கிள்ளை போகேக்கை ரிப்பறில இல்லாட்டில் லொறி பஸ்சிலை அடிபட்டுச் செத்தியள் எண்டால் உங்கட மிஸிஸ்/க்கு நாங்க காசு குடுப்பம்.

அப்பிடி நீங்கள் சாகாமத் தற்செயலாப் பிழைச்சு கை கால் மட்டும் இல்லாமப் போய்ப் படுக்கையிலை கிடந்தியள் எண்டாலும் காசு தருவம்.பேந்து நீங்கள் அங்கினேக்கை இங்கினேக்கை போகேக்கை வரேக்கை கண்ட கிண்ட இடங்களிலையும் கண்டதையும் திண்டு உங்களுக்கு ஹார்ட் அற்றாக் வந்து ஆசுபத்திரியிலை போய் இருந்தியள் எண்டால் அதுக்கும் நாங்கள் காசு தருவம்.

அது சரி அங்கிள் உப்பிடி லைப் இன்சூரன்ஸ் போடுறது எண்டால் உங்களுக்கு சுகர் கொலஸ்றோல் எண்டு கொள்ளை கோதாரி ஒண்டும் இருக்கப்படாது எண்டான்.

இவன் இப்பிடிச் சொல்லவும் வீட்டம்மா ஓ ..ஐசீ…எண்டா.

வீட்டம்மா ஓ..ஐசீ…எண்டா எண்டால் அவவுக்கு கோவம் பிடரிக்குள்ளால ஏறி முன்னால மூக்குக்கு கிட்ட வருகுது எண்டு அர்த்தம். அப்பிடி வந்தும் அவ அப்ப தம்பி உங்கட அம்மா அப்பாவுக்கு உந்த இன்சூரன்ஸ் போடேல்லையோ எண்டா.

உடன அவன் இல்லை அன்ரி அவைக்கு உப்பிடி காசை வீணாக்க விரும்பவில்லை எண்டதுந்தான் தாமதம் வீட்டம்மா அப்ப சும்மா கவிதை கட்டுரை எழுதிக்கொண்டு என்ரை காலைச்சுத்திச் சுத்தி வாற மனுசனையே உன்ரை கொமிசனுக்கு சாக்காட்டலாமோ அக்சிடன்ற் பட வைக்கலாமோ எண்டு வந்தனி எண்டு தும்புத்தடியைத் தூக்க அவன் லவ்வேர்ஸ் டேக்கு லவ்வரோட பீச்சுக்கு போனவன் தன்ரை மனிசியைக் கண்டிட்டு ஓடுற மாதிரி விழுந்தடிச்சு ஓடினான்…

# உங்கள் படைப்பாக்கத் திறனுக்கு ஒரு வாய்ப்பு



நவீன காலத்தில் உற்பத்தித் துறையில் ஈடுபடும்போது அதனை மேம்படுத்தவும் இலகுபடுத்தவும் புதிய உபகரணங்கள் அல்லது இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

அவ்வாறான கருவிகள் பலவற்றை கடந்த காலங்களில் எம்மவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

உங்களிடமும் அவ்வாறான ஒரு யோசனை இருந்து, அதனைச் செயற்படுத்த உதவி தேவையாக இருந்தால் அதனை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராக இருக்கின்றது.

இரண்டு பிரிவுகளாக இதற்கான உதவிகளை வழங்குவதற்கு பொருண்மியம் குழுவினர் திட்டமிட்டுள்ளார்கள்.

## உள்நாட்டு உற்பத்தி மேம்பாட்டிற்கான புதிய இலகு கருவிகளை கண்டுபிடித்தல்

1. வேலையை இலகுபடுத்துவதும் நேரத்தை மிச்சப்படுத்துவதுமாக அமைதல்.
2. சமூக பாவனைக்கு உகந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் அமைதல்.
3. கூடுதலாக கிடைக்கப்பெறும் வளங்களைக்கொண்டு உருவாக்க கூடியதாக அமைதல்.
4. ஏற்கனவே கண்டுபிடிக்கப்படாத, சொந்த தயாரிப்பாக இருக்க வேண்டும்.
5. நியாயமான விலையில் எல்லோருக்கும் கிடைக்ககூடியதாகவும், அனைவரும் பயன்படுத்தகூடியதாகவும் அமைதல்.

இதற்கான உங்கள் யோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம். உங்களுடைய முன்மொழிவுடன் அதற்குத் தேவையான செலவுத் தொகையும் குறிப்பிடப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படும் திட்டங்களுக்கு தேவையான நிதி உதவியை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராகவுள்ளது.

## மக்களை வலுப்படுத்தும் சனசமூக நிலையங்களினை அடையாளப்படுத்தல்

1. பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
2. இவர்கள் தமது சமூகத்து மக்களையும் உள்ளூர் வளங்களையும் இணைத்து திட்டங்களை மேற்கொள்வது பொருத்தப்பாடானது.
3. அவர்கள் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகளையும் , வரும் காலத்தில் உள்நாட்டு அல்லது தமது சமூகத்தில் செயற்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் திட்டங்களையும் சமர்ப்பிக்கலாம்.
4. திட்டங்கள் அனைத்தும் அந்த சமூகத்தின் நன்மை கருதுவனவாயும், அவர்களனைவரதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.
5. கண்காணிப்பு குழுவினரால் ஆராய்ந்து முடிவுறுத்தப்படும் திட்டங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கான நிதி உதவிகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் அடுத்த வாரம்

உங்களுடைய முன்மொழிவுகளை வாட்ஸ் அப் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

**வாட்ஸ் அப் இலக்கங்கள் +94 777 30 4010 / +94 702 67 5575**
**மின்னஞ்சல் - tamilseconomy@gmail.com**

**சிறிமாவோ அம்மையார் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க இந்த பஞ்சத்தை வலிந்து உருவாக்கினார். விவசாயிகள் சாகமாக பயிர் செய்தனர். படித்துவிட்டு வேலையற்றிருந்த வாலிபர்களுக்கு மாதாந்தம் ஐம்பது ரூபா வழங்கப்பட்டு வந்தது. அவர்களுக்கு தோட்டம் செய்வதற்கான நிலம் காடுகளாகவும் கொலனிகளாகவும் வழங்கப்பட்டது.**

# விசுவமடுக்குளத்தின் கதை

## பார்வை 7



தமிழ்க்கவி








ஆயிரத்து தொளாயிழரத்து அறுபதுகளின் நடுப்பகுதி. எமது நாட்டில் வரலாற்றின் முக்கியமான ஒரு மைல்கல்லை கடக்கவேண்டியிருந்தது. அதற்கான பாதை மட்டும் மிக மோசமானதாக இருந்தது. நாட்டில் எதிர்பாராத வகையில் பெரும் பஞ்சம் உருவாக்கப்பட்டது. வாராந்தம் தலைக்கு இரண்டு கிலோ என வழங்கப்பட்ட கூப்பன் அரிசி அரைக் கொத்தாக குறைக்கப்பட்டது. மா, மிளகாய், மல்லி, உள்ளி போன்ற அன்றாட சமையல் பொருட்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டது.

அதுமட்டுமல்ல திரைப்படங்கள், இந்திய சஞ்சிகைகள், புத்தகங்கள், புடைவைகள் எல்லாமே கட்டுப்படுத்தப்பட்டோ அல்லது அறவே நிறுத்தப்பட்டோ குறைந்தன. புால்மா, சீனி என்பனவும் கட்டுக்குள் வந்தன.

இங்கே அண்மையில் காஸ், பெற்றோல் போன்ற பொருட்களுக்காக நடந்த போராட்டத்தை அனைவரும் அறிவோம். அன்று போராடவும் வலுவற்ற மக்கள் பாண் பேக்கரிகளின் முன் இரவு முழுதும் படுத்திருந்து அதிகாலையில் பாண்வாங்கினார்கள். அதுவும் குறிப்பிட்ட அளவுக்கு மேல் கிடைப்பதில்லை. எட்டுச்சதம் விற்றாலும் அழியாமல் கிடந்த மரவள்ளிக்கிழங்கு எண்பதுசதமாக விலையேறியது. உழுந்து, பயறு என்பன காணக்கிடைக்காத பொருளாயிற்று கடைகளில் தேநீர் சாயம் மட்டும் வழங்கப்பட்டது. இது தனிக்கதை. மக்கள் பட்டினியால் இறந்தும் போயினர்.

சிறிமாவோ அம்மையார் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க இந்த பஞ்சத்தை வலிந்து உருவாக்கினார். விவசாயிகள் சாகமாக பயிர் செய்தனர். படித்துவிட்டு வேலையற்றிருந்த வாலிபர்களுக்கு மாதாந்தம்ஐம்பது ரூபா வழங்கப்பட்டு வந்தது. அவர்களுக்கு தோட்டம் செய்வதற்கான நிலம் காடுகளாகவும் கொலனிகளாகவும் வழங்கப்பட்டது.

வன்னிக்காட்டுக்கு வர விரும்பாதிருந்த படித்த வாலிபர்கள் இப்போது முன்வந்து நிலத்தை பெற்றனர். மிளகாய், வெங்காயம் செய்யவும் தென்னந் தோட்டம் செய்யவும், நெற் செய்கைக்குமாக காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்த பயிர்களுக்கான நீர்ப்பாசனம் குளங்களிருந்தே கொடுக்கப்பட்டன.

மேலதிகமான விவசாய உத்தியோகத்தர்கள் இந்த தொழிலில் ஆலோசனைகளை வழங்கவும் தோட்டச்செய்கை ஆரம்பிப்பதற்கான மாதாந்த உதவித் தொகையும் வழங்கியது அரசாங்கம். வெங்காயம் செத்தல்மிளகாய், உழுந்து, கௌபீ போன்றவை பெருமளவில் லாபத்தை தந்தன. ஆந்த வகையில் உருவான குளம் விசுவமடு.

விசுவமடுவில் குளம் இருப்பதையும் அதை திருத்தி அமைத்து விவசாயத்து வழங்கலாம் என்பதையும் 1960 முதல் 1970 வரை அதை நடைமுறைப்படுத்தி திருத்தியமைத்து குடியேற்றத்தையும் முடித்தனர். இதனோடு அண்டியதாக மலையகத்திலிருந்து இனக்கலவரம் காரணமாக வெளியேறிய மக்களை குடியேற்றி இரண்டு திட்டங்களும் கிணற்று நீர்ப்பாசன வசதியுடன் உருவானது.

ரெட்பானா குடியேற்ற வாசிகளுக்கு ஆரம்ப பயிர் செய்கையாக பட்டுப்பூச்சி வளர்க்க திட்டமிடப்பட்டு முசுக்கொட்டைச்செடி நட்டார்கள். எனினும் அவை பெரிதாக பயன் தரவில்லை. மலையகத்திலிருந்து வந்த பெருமளவு மக்களுக்கு கூலி வேலைகள் நிறையவே கிடைத்தன. புதிய குடியேற்ற வாசிகளின் காணிகளை திருத்தவும் வாய்க்கால்கள் அமைக்கவும் மக்களை பயன்படுத்தியமையால் அவர்களுக்கு தமது

வங்கிக் கடனுதவிகளும் வழங்கப்பட்டன. இவ்வாறு படித்த வாலிர்கள் ஆண்கள்மட்டும் கொண்ட குடியேற்றங்கள் கிழக்கிலும், வடக்கில்விசுவமடு, மல்லாவி, திருவையாறு, முத்தையன்கட்டு போன்ற இடங்கள் தெரிவுசெய்யப்பட்டும் வழங்கப்பட்டன.

மகளிருக்காக மிருவில், கனகாம் பிகைக்குளம் ஆகிய இடங்களில் இரு இடங்களில் காணிகள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு காடுகளை துப்பரவு செய்து பயிர்ச்செய்கை பண்ணும் வரையில்



வாழ்வாதாரத்தை கொண்டு வாழ்க்கையை வாழ முடிந்தது.

அப்படியும் அவர்களுக்கென்று கிடைத்தற்கரிய பேறாக சொந்த நிலம் கிடைத்தமை மகிழ்ச்சியாக இருந்தது. மயில்வாகனபுரம், பிரமந்தனாறு மூங்கிலாறு, புன்னைநீராவி போன்ற இடங்களில்வளமான பயிர்ச் செய்கையாளர்கள் இருக்கிறார்கள். விசுவமடுவின் அபிவிருத்தியில் மக்களின் உழைப்பே பெரும்பாலும் இருந்தது.

பரந்தன் முல்லைத்தீவு சாலையில் ஏறக்குறைய பதினைந்தாவது கிலோமீட்டர் தொலைவில் வரும் விசுவமடு நகரம். நகரின் மத்தியிலிருந்து தெற்கு நோக்கி திரும்பும் வீதியில் இரண்டுமைல் சென்றால் விசுவமடுக்குளம் தெரியவரும். இது பிரமந்தல் ஆற்றை மறித்து உருவான குளம் எனினும் இதற்கு முன்பாகவே பிரமந்தல் ஆற்றில் நீரைப்பெற்று வேறு குளங்களும் உண்டு விசுவமடு மிளகாய், வெண்காயம், தென்னை மரச்செய்கை என்பவற்றில் பெரும் புகழ் பெற்றது.

விசுவமடுவில் யாழ்ப்பாணத் தமிழரை அவ்வளவு இலகுவாக கொண்டுவர முடியவில்லை. அதற்கான பிரச்சாரங்களை முன்னெடுக்கவேண்டி வந்தது. அந்த வகையில்

"வெளிக்கிடடி விசுவமடு" என்ற நாடகம் இன்றும் பேசப்படும் அருமையான நிகழ்ச்சியாகும். மக்கள் வங்கியின் ஆதரவில் இடம்பெற்ற வானொலி நாடகமான "தணியாத தாகம்" பெருமளவு குடியேற்ற வாசிகளுக்கு உந்து சக்தியாயிற்று.

விசுவமடு உயர்வலயத்திற்கான மேற்பாசன வாய்க்கால்கள் பயனற்றுப் போயின. அவை இயற்கை முறையிலன்றி டீசலில் இயங்குவதாக அமைந்தமையே இதற்குக் காரணம். விசுவமடுவின் ஆரம்ப பயிர்ச் செய்கையாக செத்தல் மிளகாய் வெண்காயம் பயிரிட்ட விவசாயிகள் இரண்டொரு வருடங்களிலேயே பெரு லாபம் ஈட்டினர். சிறிமாவோ அம்மையாரின் திட்டத்தில் செத்தல் மிளகாய் பயிரிட்டு செத்தல் மிளகாய் வெங்காயம் என்பவற்றை மாட்டு வண்டிகளில் ஏற்றி ரயிலில் போட்டு கொழும்புக்கு கொண்டு சென்றவர்கள் வரும் போது உழவு இந்திரம் ஒன்றையும் அதன் பாரம் இழுக்கும் பெட்டியையும் அங்கிருந்தே வாங்கி வந்தனர். இவர்களே பின்நாளில், காணிகளில் பெருமளவில் தென்னை கமுகு போன்ற பயிர்களை நாட்டியும் ஊடே பழமரங்களை நட்டும் விரைவிலேயே தோட்டச் செய்கையை ஏறக்கட்டினர்.

அவர்களது சந்ததியினர் நன்கு படித்து நல்ல அரச உத்தியோகம் பார்க்கவும், அல்லது வெளிநாடுகளில் வாழவும் கிளம்பிச் சென்றனர் . விசுவமடுக்குளம் தனது சக்திமிக்க கட்டுகளை பெரு வெள்ள காலத்தில் அதாவது 2009 ஆண்டு வெள்ளப்பெருக்கில் இழந்து உடைப்பெடுத்தது. அதன்பின் 2010ம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கி ஆதரவில் நெக்கோட் நிறுவனத்தால் திருத்தி அமைக்கப் பட்டுள்ளது அந்தப் பிரதேச கிணறுகள் அனைத்தும் உயரிய நீர்மட்டத்தை கொண்டுளது சிறுதானியப் பயிர்ச் செய்கை மரக்கறி வாழை என்பன செழித்து வளர்கின்றன. ஒரு காலத்தில் உலகையே திரும்பிப் பார்க்க வைத்த மிளகாய் வெண்காயச் செய்கை இப்போது பெருமளவு கைவிடப்பட்டுள்ளது.

விசுவமடு குடியேற்றத்தின் மூன்றாவது தலைமுறை இப்போது வாழ்கிறது. பெரும்பாலும் யந்திரங்களின் பாவனை தொழிற்சாலைகள்கடைகள். மாத ஊதியத்தில் வேலை செய்யும் ஆர்வம் இவர்களிடையே காணப்படுகிறது என்பதுடன் சற்று வசதி கிடைத்தாலும் வெளிநாட்டிற்கு பறந்து செல்ல துடிக்கும் மனோபாவம் நிறைந்திருக்கிறது. தோட்டச் செய்கை இப்போது யாருக்கும் லாபம் தருவதில்லை இடைத்தரகர்களே அதனால் கொழிக்கின்றனர்.

பயிர்விதைப்பதற்கான விதைகளை முன்பு போல நாமே சேகரிக்க முடிவதில்லை வாங்கும் விதைகளும் உண்மையானவைதானா என்ற சந்தேகம் இரண்டு மூன்று மாத வேலையை தொலைப்பதாகவே உள்ளது மூன்று மாத கஸ்டத்தின்பின் விதைகள் நல்லவை என பாடுபட்டபின் அவை மலடாக நிற்பதை விவசாயியால் பொறுத்துக் கொள்ள முடியுமா? விவசாயம் என்பது நெல் வேளாண்மையுடன் மட்டுப்படுகின்றது.



# வாடகை வருமான வரி




2025 ஆம் ஆண்டில் சொத்து வரியை (Wealth Tax) அறிமுகப்படுத்த அரசாங்கம் தயாராக இருந்த போதிலும், தற்போதுள்ள தடைகள் மற்றும் நெருக்கடிகள் காரணமாக, கணக்கிடப்பட்ட வாடகை வருமான வரி (Imputed Rental Income Tax - IRIT) என்கின்ற புதிய வரியினை அறிமுகப்படுத்த இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான உதவித் திட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் வருமான இலக்குகளை அடைவதற்கான முயற்சிகளுக்கமைய, இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்காக இவ்வாறான வரியை அறிமுகப்படுத்துவது மிகவும் முக்கியமானது என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. 2026 ஆம் ஆண்டளவில் இந்த வரி (IRIT) முறையை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கணக்கிடப்பட்ட வாடகை வருமான வரி (IRIT) என்பது ஒரு வீட்டின் உரிமையாளர் வீட்டை வாடகைக்கு விட்டிருந்தால்/ விட்டிருக்கின்றார் என்ற முறையில் கருதப்பட்டு அதன் அடிப்படையில் அவர் பெறும் வாடகை வருமானத்தின் மதிப்பீடாகும். இந்த வரி வீட்டின் மதிப்பின் அடிப்படையில் அறவிடப்பட மாட்டாது. ஆனால் அதன் மூலம் பெறக்கூடிய வாடகை வருமானத்தினை அறிமுகப்படுத்தப்படும் புதிய முறைமையின் கீழ் கணிக்கப்பட்டு அந்த வாடகை வருமானத்திற்கு வரி அறவிடப்படும் முறைமையாகும்.

கணக்கிடப்பட்ட வாடகை வருமான வரி அறிமுகம் தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, “சராசரி வருமானம் ஈட்டுபவர்களை இந்த புதிய வரி பாதிக்காவண்ணம் அமையும்” என்றும் “முதல் குடியிருப்புச் சொத்துக்கு கணக்கிடப்பட்ட வாடகை வருமான வரியிலிருந்து வரி விலக்களிக்கப்பட்டுள்ளது” என்றும் அவர் கூறியுள்ளார். மேலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகையில் “அதிக சொத்துக்களை வைத்திருக்கும் தனிநபர்களுக்கு இந்த வரி அமையும் வண்ணம் கொண்டுவரப்படும் என்று கூறியுள்ளார். அதாவது முதலாவது சொத்துக்கு வருமானம் ஈட்டுவோர் உத்தேச வாடகை வரியில் இருந்து விடுவிக்கப்படுவர் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க (Ranil Wickremesinghe) தெரிவித்துள்ளார். இந்த வரி முறையை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ளூராட்சி சபை மட்டத்தில் தரவுத்தளமொன்றை நிறுவுவதில் இலங்கை கவனம் செலுத்த வேண்டும் எனவும், நாட்டிலுள்ள சொத்து உரிமையாளர்களுக்குச் சொந்தமான சொத்துக்களின் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீட்டை தரவுத்தளத்தில் உள்ளடக்கியிருக்க வேண்டும் எனவும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. இந்த ஆண்டு ஒகஸ்ட் மாதத்திற்குள் தரவுத்தளத்தை உருவாக்கும் பணியை முடிக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

**1. கணக்கிடப்பட்ட வாடகை வருமானம் என்றால் என்ன ?**

கணக்கிடப்பட்ட வாடகை வருமானம் என்பது வீட்டு உரிமையாளர்கள் தங்கள் வீடுகளை வாடகைக்கு விட்டிருந்தால் அவர்கள் சம்பாதிக்கக்கூடிய வருமானமாகும்.

**2. நடைமுறைக்கு வரும் திகதி: - ந.ந.க. ஏப்ரல் 1, 2025**

**3. யாருக்கு IRIT வரி அறவிடப்படும்**

கணக்கிடப்பட்ட வாடகைக் கணக்கீட்டின் அடிப்படையில் உரிமையாளர் பாவனையில் உள்ள மற்றும் ஏனைய குடியிருப்புச்


AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

சொத்துகளுக்கு வரி அறிமுகப்படுத்தப்படும். இருப்பினும் முதன்மை குடியிருப்புகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டது.

**4. எந்தப் பெறுமதிக்கு IRIT வரி விதிக்கப்படுகின்றது.**

உண்மையான சொத்தை விட தனிநபர்களின் கணக்கிடப்பட்ட வருமானத்தின் மீது வரி விதிக்கப்படுகின்றது.

**5. வரி விலக்கு**

வரி விலக்கு வரம்பு மற்றும் வரி விகித அட்டவணை அறிமுகப்படுத்தப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. முதலாவது குடியிருப்புச் சொத்துக்கு வருமானம் ஈட்டுவோர் உத்தேச வாடகை வரியில் இருந்து விடுவிக்கப்படுவர்.

**6. தரவுத்தளம்**

அனைத்து மாநகர சபைகளிலும் மதிப்பிடப்பட்ட சொத்தின் பெறுமதி, சமீபத்திய மதிப்பீட்டு திகதி மற்றும் சொத்து வகை

போன்ற தகவல்களை உள்ளடக்கிய சொத்து மதிப்பீடு குறித்த தரவுத்தளம் ஆகஸ்ட் 2024க்குள் நிறுவப்பட உள்ளது.

**7. விற்பனை விலை மற்றும் வாடகைப் பதிவேடு (Sales Price and Rents Register - SPRR)**

நாடு தழுவிய டிஜிட்டல் விற்பனை விலை மற்றும் வாடகைப் பதிவேட்டை (Sales Price and Rents Register - SPRR) முழுமையாகச் செயல்படுத்துவது மார்ச் 2025 இன் இறுதிக்குள் செயல்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD), அரசு மதிப்பீட்டு திணைக்களம், காணி பதிவாளர் திணைக்களம் மற்றும் பொதுமக்களால் அணுகக் கூடிய வகையில் அமைக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த டிஜிட்டல் SPRR சொத்து மதிப்புகள் மற்றும் கணக்கிடப்பட்ட வாடகை வருமான வரியை மதிப்பிடுவதற்கான முக்கிய ஆதாரமாக இருக்கும். அதன் முதற்கட்டமாக இந்த முறைமையை தொடங்குவதற்கு, ஆகஸ்ட் 2024 இல் தற்காலிக SPRR அறிமுகப்படுத்தப்படலாம் என்று மேலும் கூறப்பட்டுள்ளது.

**8. அரசு நிறுவனங்களிடையே தரவுப் பகிர்வு**

ஏப்ரல் 2025 க்குள் நோட்டரி சட்டத்தில் (Notaries Act) திருத்தம் செய்வதன் மூலம் தொடர்புடைய அரசு நிறுவனங்களிடையே தரவுப் பகிர்வை மேம்படுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நோட்டரி செய்யப்பட்ட ரியல் சொத்து ஒப்பந்தம் பற்றிய தகவல் தானாகவே டிஜிட்டல் SPRR இல் வழங்கப்படுவதை உறுதி செய்கின்றது.

**9. ஏற்கனவே இந்த வரி அமுலில் இருந்ததா ?**

இதேபோன்ற வரியானது உள்நாட்டு இறை வரி சட்டத்தில் முன்னர் உள்ளடக்கப்பட்டிருந்தது. 2006 ஆம் ஆண்டின் எண். 10. இந்த ஆட்சியின் கீழ், முதன்மை குடியிருப்புகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டது மற்றும் மதிப்பீடு நோக்கங்களுக்காக மதிப்பிடப்பட்ட மதிப்புகள் அடிப்படையைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்பட்டன.

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) சமீபத்திய வெளியீடு, விரிவாக்கப்பட்ட நிதி வசதி (EFF) திட்டத்துடன் தொடர்புடைய ஆவணங்கள், கணக்கிடப்பட்ட வாடகை வருமான வரியாக செயல்படுத்த முன்மொழியப்பட்ட சொத்து வரியைக் குறிப்பிடுகின்றன.

இலங்கையின் ஆழமான, சிக்கலான மற்றும் முன்னோடியில்லாத பொருளாதார நெருக்கடிக்கான முக்கிய காரணங்களில் ஒன்று, அரசாங்க வரி வருமானத்தில் ஏற்பட்ட கூர்மையான வீழ்ச்சியாகும். இது அதிக வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறைக்கு வழிவகுத்தது. மற்றும் அதன் விளைவாக பொதுக் கடனை நீடிக்க முடியாத அளவிற்கு அதிகரித்தது. இதன்படி, நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான தீர்வு நடவடிக்கைகள் அரசாங்கத்தின் வருவாயை மேம்படுத்துவதற்கான ஒரு கவனமான முயற்சியை உட்படுத்தியுள்ளன. 2022 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.3% ஆக இருந்த இலங்கையின் அரசாங்க வருவாயை 2025 இறுதிக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15% ஆகக் கொண்டுவரும் முயற்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் வருவாய் அடிப்படையிலான நிதி ஒருங்கிணைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கு அமைவாக பெருநிறுவன மற்றும் தனிநபர் வருமான வரி நடவடிக்கைகள் மற்றும் பெறுமதி சேர் வரி வரி (VAT) பல சீர்திருத்தங்களால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை, 2023 ஆம் ஆண்டிற்கான வருவாய் இலக்குகள் பெருமளவில் எட்டப்பட்டுள்ளன. மேலும் 2024 ஆம் ஆண்டிற்கான இலக்கு 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13.5மூ என்ற தேவையான அளவை எட்டுவதற்கான பாதையில் உள்ளது. எனவே, 2025 ஆம் ஆண்டில் 1.5% GDP வருவாய் ஆதாயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15% வருவாய் இலக்கு. 2025 இலக்கை அடைய உதவும் என எதிர்பார்க்கப்படும் முக்கிய வருவாய் நடவடிக்கை சொத்து மீது கவனம் செலுத்தும் செல்வ வரி ஆகும். மார்ச் 2023 இல் IMF திட்ட அனுமதியின் தொடக்கத்திலிருந்து, 2023, 2024 மற்றும் 2025 இல் எதிர்பார்க்கப்படும் வருவாய் நடவடிக்கைகள் பொதுக் களத்தில் தெளிவாக வழங்கப்பட்டுள்ளன.

உத்தேசிக்கப்பட்ட சொத்து வரி வடிவமைப்பின் மேம்பட்ட கட்டத்தில் உள்ளது. எனவே, விகிதங்கள் மற்றும் வரம்புகளின் குறிப்பிட்ட விவரங்களை கோடிட்டுக் காட்டுவது தற்போது சாத்தியம் அற்றதாக உள்ளது.. இருப்பினும், இந்த வரியின் கவனம் அதிக செல்வந்தர்கள் மீது உள்ளது. சராசரி வருமானம் ஈட்டுபவர்கள் மீது அல்ல. சமூகத்தின் பணக்கார உறுப்பினர்களுக்குச் சொந்தமான மிக அதிக மதிப்புள்ள சொத்து அல்லது பல சொத்துக்கள் மீது வரி இலக்கு வைக்கப்படுவதை உறுதி செய்வதற்காக பொருத்தமான வரியில்லா வரம்பு மூலம் இந்த நோக்கம் அடையப்படும். 2025 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.2% மற்றும் 2026 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.4% வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படும் வரியானது இந்த குறிப்பிட்ட இலக்கை நிரூபிக்கிறது.

வரியின் வடிவமைப்பு இரட்டை வரிவிதிப்பு மற்றும் பொருளாதார ஊக்குவிப்புகளை சிதைக்கும் எந்தவொரு கூறுகளையும் தவிர்க்க பொருத்தமான தொடர்புபடுத்தக்கூடிய வழிமுறைகளை (set off mechanisms) உறுதி செய்யும். சொத்து வரிகள் பல நாடுகளில் (இந்தியா போன்ற வளரும் நாடுகள் உட்பட) செயல்படுத்தப்படுகின்றன, ஏனெனில் அவை மிகவும் திறமையான, முற்போக்கான மற்றும் பொது சேவைகளுக்கு நிதியளிப்பதற்கான வருவாயை உருவாக்கும் சிதைக்காத வழிமுறையாகக் கருதப்படுகின்றன.

இந்த வரியானது தேவையான சட்டத் திருத்தங்களின் வழக்கமான சட்டச் செயல்முறையின் மூலம் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மற்றும் ஏப்ரல் 2025 இல் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சட்டமியற்றும் செயல்முறையை முடிப்பதுடன், மதிப்பீட்டை மேம்படுத்தும் வகையில் குறிப்பிடத்தக்க நிர்வாகப் பணிகள் செய்யப்பட வேண்டும். உண்மையில், இது ஒரு புதிய வரி நடவடிக்கை அல்ல. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு வருவாய்ச் சட்டம் “நிகர வருடாந்திர மதிப்பு” என அழைக்கப்படும் இதேபோன்ற வருமானக் கணக்கீட்டை உள்ளடக்கியது. இலங்கையில் உள்ள சொத்துக்கள் உள்ளூராட்சி விகிதங்கள் மற்றும் முத்திரை வரி போன்ற தற்போதைய வரிகளுக்கு உட்பட்டது - எனவே, அத்தகைய சொத்து வரிக்கு குறிப்பிடத்தக்க முன்னுரிமை உள்ளது.

அரசாங்க வருவாயின் தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் பட்ஜெட் பற்றாக் குறையில் தொடர்புடைய குறைப்பு ஆகியவை பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை ஆதரித்தன, மேலும் வட்டி விகிதங்களைக் குறைக்க உதவியது மற்றும் நாணயத்தின் மதிப்பை ஆதரிக்கின்றது, இது அனைத்து குடிமக்களுக்கும் பொருள் மேம்பாடுகளைக் கொண்டுவருகின்றது. பொதுச்செலவினங்களுக்கு நிதியளிக்கக்கூடிய அரசாங்க வரி வருவாயின் தேவையான அளவை எட்டத் தவறினால், முழு நாட்டிலும் பேரழிவுகரமான தாக்கங்களை ஏற்படுத்திய பொருளாதார நெருக்கடி மீண்டும் ஏற்பட வழிவகுக்கும்.

முன்மொழியப்பட்ட ஒட்டுமொத்த இந்தத் திட்டம் 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.3 சதவீதத்தை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது ஒவ்வொரு வரி செலுத்துவோர் பிரிவிற்கும் இணக்க அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பிடும். மற்றும் முன்னுரிமை அளித்து, வரி செலுத்துவோரின் கல்வி, பதிவு செய்தல், தாக்கல் செய்தல், பணம் செலுத்துதல் மற்றும் ஆபத்து ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான இடர் மேலாண்மைத் திட்டத்தைத் தீர்மானிக்கும்.

# சமூக, பொருளாதார முன்னேற்றத்துக்கு விளையாட்டுக்கள் துணை புரிகிறதா?

## நேர்கண்டவர் - ஞானம் கவினி

**விளையாட்டுகளில் சாதனைகளை படைக்கின்ற பலரது வாழ்வை எடுத்துப் பார்த்தால் அவர்கள் ஆரம்பத்தில் மிகவும் வறியவர்களாகவும் அல்லது துன்பப்பட்டவர்களாகவும் இருந்திருக்கிறார்கள் . ஆனால் சாதனைகளுக்கு பின்னான அவர்களது காலம் மிகவும் பிரகாசமாக இருந்திருக்கிறது பலர் தங்களுடைய பொருளாதாரத்தை விளையாட்டின் மூலம் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் தாங்களும் வாழ்ந்து பலரையும் வாழ வைத்துக் கொண்டிருக்கும் பல விளையாட்டு வீரர்களை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம் .**

தொடர்ந்து நான்கு வருடங்களாக 2014 -2017 ம் ஆண்டு வரை கோலுன்றிப் பாய்தலில் தேசிய சாதனைகளைப் படைத்தவர் நப்தலி யோய்சன்.

ளுசை துழாெ வயசடிநவ அநநவ -2016 18 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் இன்னும் தன்னுடைய இலக்கை தக்க வைத்துக் கொண்டிருக்கும் இவருக்கான விருதுகளும் மெடல்களும் நம்மை பிரமிக்க வைக்கிறது.

யாழ்/அருணோதயா கல்லூரித்தாயின் மடியில் வளர்ந்த இவருக்கு சிறுவயது முதலே விளையாட்டிலும் படிப்பிலும் அதிக ஆர்வம் இருந்திருக்கிறது. கடவுளுடைய ஆசீர்வாதத்தோடு பாடசாலையிலும் சரி வீட்டிலும் சரி எல்லா பிரச்சினைகளையும் தாண்டி இவரை பலர் ஊக்கப்படுத்திக் கொண்டே இருந்திருக்கின்றனர். வீட்டிலே இவருடைய தாயும் தாயின் சகோதரியுமான சிறியதாயும் எப்போதும் பக்க பலமாக இருந்திருக்கின்றனர் .

அதேபோலவே பாடசாலை சமூகத்திலேயே பாடசாலை பழைய மாணவர் ஒன்றியம்இவருக்கு தேவையான பலவற்றை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறது.

அதேபோல பாடசாலையின் உடல் கல்வி பிரிவு ஆசிரியர் பாகீஸ்வரன் அவர்களுடைய நெறிப்படுத்தலும்,பிரதீபன் ஆசிரியர் ,கமலமோகன் ஆசிரியர், கல்லூரியின் முதல்வர் கேதீஸ்வரன் என்று பலர் அக்கறையோடு நெறிப்படுத்தி இருக்கின்றனர் என்று பலரை நன்றியோடு நினைவு கூறுகிறார் யோய்சன்.

கோலூன்றி பாய்களோடு மாத்திரம் நின்று விடாமல் நீளம் பாய்தல், சட்ட வேலி ஓட்டம் போன்று பல விளையாட்டுகளில் தனக்கான இடத்தை தக்க வைத்திருக்கிறார்.

இதுவரைக்கும் மற்றவர்களால் முறியடிக்கப்படாதிருக்கும் இவரது ஓட்டங்களின் எண்ணிக்கை மற்றும் இவரது விருதுகள் எல்லாவற்றுக்கும் அப்பால் எளிமையாக மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் இவரிடம் நீங்கள் ஆரம்பத்தில் விளையாட்டு துறையில் காலடி எடுத்து வைத்த பொழுது உங்களுக்கு இந்த துறை கை கொடுக்கும் என்று நம்பினீர்களா என்று வினாவினோம்?

அதுக்கு அவர் உண்மையில் விளையாட வேண்டும் என்ற ஆர்வம் மாத்திரம் தான் எனக்கு இருந்தது . ஆனால் மேலதிகமாக பயிற்சிகளை பெற்று தொடர்ந்து விளையாடுவதற்கு போதிய ஆரோக்கிய உணவுகளோ அல்லது மேல் அதிக வளங்களோ அப்போது என்னிடம் இருக்கவில்லை .ஆனால் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்கின்ற ஆவல் மட்டும் என்னை துரத்திக் கொண்டே இருந்தது .உண்மையில் நான் விளையாட்டில் சாதித்ததற்கு காரணம் கடவுளின் கருணை தான்..எதுவிமில்லாத போதும் எல்லாவற்றையும் சரியான நேரத்தில் பெற்றுக் கொள்வதற்கு போராட வேண்டி இருந்தது என்கிறார்.

விளையாட்டில் மாத்திரமன்றி பாடசாலை கல்வியிலும் தனக்கென ஒரு தனி இடத்தை பிடித்திருக்கிறார். ஆரம்ப கல்வி முதல் உயர்தரம் வரை அருணோதியா கல்லூரியில் தனது படிப்பை நிறைவு செய்த யோய்சன் தற்பொழுது தேசிய கல்வியியல் கல்லூரியில் இறுதியாண்டு மாணவனாக இருக்கிறார்.

தற்போது பயிலுனர் ஆசிரியராக வவுனியா றம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் தேசிய கல்லூரியழ்ந்து உடற்கல்வி ஆசிரியராக கடமை ஆற்றுகிறார்.

பெற்றோர்கள் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும் ஒரு குழந்தை தனக்கு உரிய பாணியில் தனக்கு என்ன சாத்தியப்படும் என்று எண்ணுகிறதோ அதனை மேற்கொள்வதற்கான வழிகளை பெற்றோர்களும்ஆசிரியர்களும் ஊக்குவிக்க வேண்டும்.

எனக்கு விளையாட்டில் ஆர்வம் இருப்பதை அவதானித்த என்னுடைய




**நப்தலி யோய்சன்**

பாடசாலை சமூகம் குடும்பமும் அது தொடர்பான சகல நிகழ்வுகளிலும் என்னை ஊக்குவித்ததை நான் இப்போது நன்றியோடு நினைவு கூறுகிறேன்.அதனால் தான் நான் இப்போது தேசிய கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவனாகவும் ஒரு ஆசிரியராகவும் உருவாகுவதற்கு காரணமாக அமைந்தது.

இப்போது எனது மாணவர்களையும் என்னால் முடிந்த அளவுக்கு திறமையான வீரர்களாக உருவாக்க வேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கிறேன் .எனது பாடசாலை பெரிதும் எனக்கு உதவியாக இருக்கிறது.

கல்லூரியின் முதல்வர் மற்றும் நிரந்தர உடற்கல்வி ஆசிரியர்கள் ஏனைய ஆசிரியர்கள் என்று எல்லோரும் பக்கபலமாக இருக்கிறார்கள். எனது கனவு நிறைவுறுவதற்கு தேசிய கல்வியில் கல்லூரி ஒரு மிகப் பிரதானமான இடத்தை வகிக்கின்றது.

ஆயிரம் தடைகளை தாண்டிகோலூன்றிப் பாய்தலில் ஒரு தடத்தை பதிக்க வேண்டும் என்ற பெரு ஆவல் எனக்கு இருந்தது என்கிறார்.

சிறு வயதிலேயே தந்தையை இழந்து தாயினதும் தாயின் சகோதரயினதும் அரவணைப்பில் வளர்ந்த இவருக்கு



எப்போதும் மற்றவர்களை நேசிக்கும் பண்பு இயல்பாகவே அமைந்திருக்கிறது.

தனக்கு கிடைத்த வேலையை மிகவும் ஆர்வத்துடனும் சுறுசுறுப்புடனும் இதயசுத்தியுடனும்மேற்கொள்ளும்இவருக்க

தனது எதிர்காலம் குறித்து ஒரு திட்டம் இருக்கிறது. ஆசிரியப் பணியோடு சேர்த்து விளையாட்டுகளிலே ஈடுபட வேண்டும்.

தான் இடையில் நிறுத்திய விளையாட்டுகளை தொடர்ந்து செய்ய வேண்டும் என்றும் அவற்றில் சாதிக்க வேண்டும் என்றும்பேரவாவோடுஇருக்கிறார். காலம் அவருக்காக கனிந்து வரட்டும் பொருளாதாரத்தை பொறுத்தவரை விளையாட்டு கூடுதலான நேரத்தை செலவிடும் மாணவர்கள் பின் பொருளாதாரத்தில் பின்தங்கி போவார்களா.

கூடுதலான காலத்தை விளையாட்டு செலவிடு மாணவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கி போவார்கள் என்ற ஒரு விதமான சிந்தனை நமது மக்களிடையே இருக்கிறது. நிச்சயமாக அது உண்மைக்கு புறம்பானது.

விளையாட்டுகளில் சாதனைகளைபடைக்கின்றபலரது வாழ்வை எடுத்துப் பார்த்தால் அவர்கள் ஆரம்பத்தில் மிகவும் வறியவர்களாகவும் அல்லது துன்பப்பட்டவர்களாகவும் இருந்திருக்கிறார்கள் .

ஆனால் சாதனைகளுக்கு பின்னான அவர்களது காலம் மிகவும்பிரகாசமாக இருந்திருக்கிறது பலர் தங்களுடைய பொருளாதாரத்தை விளையாட்டின் மூலம் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் தாங்களும் வாழ்ந்து பலரையும்வாழவைத்துக் கொண்டிருக்கும் பல விளையாட்டு வீரர்களை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம் .

எனவே மைதான கலாச்சாரத்தை குழந்தைகளுக்கு ஊக்குவியுங்கள் மைதானத்தில் விளையாட சந்தர்ப்பம் அற்ற குழந்தைகள் தான் தற்போது அநேக தீய வழிகளுக்கு தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர்.

விளையாட்டு உடலுக்கு மாற்றம்ஒன்றே உள்ளத்திற்கும் பெரும் ஊட்ட சக்தியை கொடுக்கக்கூடியது. ஒரு சிறந்த விளையாட்டு வீரன் எப்போதும் நிறைந்த பண்புகளோடும் தன்னை உறுதிப்படுத்தியவனாக இருப்பான்.

அவனைச் சுற்றி எப்பொழுதும் நல்ல நண்பர்கள் கூட்டம் இருக்கும்.

தனக்கு ஏற்படுகின்ற பிரச்சனைகளை எல்லாம் லாவகமாக தாண்டி வெளியே வரக்கூடிய மன உறுதியை ஒரு விளையாட்டு வீரன் பெற்றிருப்பார்.

நாங்கள் மைதான கலாச்சாரத்தை மெல்ல மெல்ல மறந்து வருகிறோம் .ஆரம்பத்தில் பாடசாலையில் இருந்து வந்தவுடன் மைதானத்துக்கு ஓடுவதும் வீட்டிற்கு வந்து கல்வியை தொடர்வது என்று எங்களுடைய காலம் மிகவும் அழகாகத்தான் கழிந்திருக்கிறது.

மைதானத்தில் விளையாடாத குழந்தைகளைக் குறித்து எப்போதும் சிறிய கவலை இருக்கிறது அவர்கள் தங்களுடைய தன்னம்பிக்கையை தாங்களே தகர்த்துக் கொள்கிறார்கள்.

பல பெற்றோர்கள் குழந்தைகளை விளையாடுவதற்கு அனுமதிப்பதில்லை.

விளையாடுகின்ற குழந்தைகள் படிப்பை கவனிப்பதில்லை என்கின்ற ஒரு மனோநிலை பெற்றோர் இடத்தில் இருக்கின்றது . உண்மையில் விளையாடுகின்ற குழந்தைகள் நிறைந்த மன மகிழ்ச்சியோடு தங்கள் கல்வியை தொடர்வதற்கு ஆரம்பிக்கிறார்கள். அவர்களுடைய மூளை சுறுசுறுப்படைகின்றது அதனால் கல்வியில் அதிக கவனம் செலுத்துவதற்கு இது வாய்ப்பாக இருக்கின்றது.

ஆகவே விளையாட்டில் ஆர்வமுள்ள குழந்தைகளை இனம் கண்டு அவர்களுக்கு சரியான நெறிப்படுத்தலங்களையும் பயிற்சிகளையும் வழங்கி அவர்களை சாதனையாளர்களாக மாற்ற வேண்டியது எங்கள் ஒவ்வொருவருடைய கடமை என்கிறார்

தன்னை ஒரு சிறந்த ஆசிரியராக கட்டமைத்துக்கொண்டிருக்கும்கருணாகரன் நப்தலி யோய்சன்.



# கம்பு கை கொடுக்கும்



**உடல் எடை குறைப்பு**

பசி அதிகம் எடுப்பவர்கள் அடிக்கடி எதையாவது உண்பதால் அவர்களின் உடலில் கட்டுப்பாடில்லாமல் எடை கூடிவிடுகிறது. இவர்கள் கம்பு கொண்டு செய்யப்பட்ட உணவுகளை உண்பதால் பசியை சரியான நேரத்தில் மட்டுமே எடுக்கச்செய்து, இவர்களின் உடல் எடையை குறைக்கும்.

**குடல் புற்று**

இன்றைய காலங்களில் மனிதர்களுக்கு பல்வேறு விதமான புற்று நோய்கள் வருகின்றன. அதில் ஒன்று தான் குடல் புற்று. கம்பு உணவுகளை தினந்தோறும் ஒரு முறையேனும் உட்கொள்பவர்களுக்கு குடல் புற்று ஏற்படுவது தடுக்கப்படுவதாக மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.

**இளமை தோற்றம்**

கம்பு அதிகம் உட்கொள்பவர்களின் ரத்தத்தில் இருக்கும் செல்களின் பிராணவாயு உபயோகிப்பை அதிகப்படுத்துவதால், அவர்களின் தோலில் சுருக்கங்கள் ஏற்படுவதை தடுத்து, தோல் பளப்பளபையும் இளமை தோற்றத்தையும் தருகிறது. முதுமை அடைவதை தாமதப்படுத்துகிறது.

**தாய்ப்பால் சுரப்பு**

புதிதாக குழந்தை பெற்ற சில தாய்மார்களுக்கு ஒரு சில சமயங்களில் தாய்ப்பால் சுரப்பு குறையும் அல்லது நின்றுவிடும். இந்த தாய்மார்கள் தினமும் கம்பு கூழ் அல்லது களி போன்றவற்றை உண்பதால் தாய்ப்பால் சுரப்பு அதிகரிக்கும்.

**மாதவிடாய்**

பெண்களுக்கு மாதந்தோறும் ஏற்படும் மாதவிடாயின் போது சமயங்களில் அதிக ரத்த போக்கும், அடிவயிற்று வலியும் ஏற்படுகின்றன. இப்படியான நேரங்களில் இளம் சூடாக கம்பு கூழ் அல்லது கம்பு சூப் அருந்த மேற்கண்ட பிரச்சனைகள் தீரும்.

**ரத்த கொதிப்பு**

கம்பு ரத்தத்தில் இறுக்கத்தன்மையை தளர்த்தி பிராணவாயு கிரகிப்பை அதிகப்படுத்துவதால் உயர் ரத்த அழுத்தம் போன்றவை ஏற்படும் வாய்ப்பை தடுக்கிறது. ரத்தத்தில் இருக்கும் கழிவுகளை நீக்கி, ரத்தத்தை தூய்மைப்படுத்துகிறது. இதனால் உடல் சுறுசுறுப்பாக இயங்க முடிகிறது.

**முடிகொட்டுதல்**

இன்று பலருக்கும் இருக்கும் ஒரு பிரச்சனை தலைமுடி கொட்டுதல் ஆகும். முடி நன்கு தழைத்து வளர "கெராட்டீன்" எனும் புரதம் அவசியம். இது கம்பில் அதிகம் நிறைந்துள்ளது. இதை உணவாக அதிகம் உண்பவர்களுக்கு முடி கொட்டுவது குறையும்.

**உடல் சூடு**

சிலருக்கு சுற்றுப்புற சூழலாலும், உடலில் ஏற்படும் மாற்றங்களினாலும் உடல் அதிகம் வெப்பமடைந்து, அதனால் சில பாதிப்புகளை சந்திக்கின்றனர். இவர்கள் தினமும் காலை வேளைகளில் கம்பு கூழை பருகி வந்தால் உடல் அதிகம் உஷ்ணமடைவது குறையும். இவ்வாறு கம்பினால் கிடைக்கும் பலன்கள் பல.

**தமிழர் பொருண்மியத்தில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க...**

**கட்டணவிபரம்**

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.10,000/- | ரூ.20,000/- |
| அரைப்பக்கம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| காற்பக்கம் | ரூ.3,500/- | ரூ.8,000/- |
| வரி விளம்பரம் | இலவசம் | இலவசம் |

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

வாட்ஸ் அப் இலக்கம் +94 777 920 384

# மாதச் சம்பளம் வாங்குபவர்கள் செய்யும் நிதித் தவறுகள்!

**தீவிர வேளாண்மை முறையில் நெற்பயிர் அதிகமாக விளைவிக்கப்படும். விளைநிலம் சிறியதாக இருந்தாலும் அவற்றில் விவசாயிகள் தீவிர வேளாண்மை செய்வர். வணிக வேளாண்மை பரந்த வேளாண்மை எனப்படுகிறது. இவ்வகையில், பயிர்கள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன. பயிரிடுவதற்கு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.**

க. அமுதன்



நம்மில் பெரும்பாலானோர் மாதச் சம்பளமே கதி என வாழ்கிறோம். ஒவ்வொரு மாத இறுதியிலும், 'எப்போது முதல் தேதி வரும்?!' எனத் தவமாய்த் தவம் இருக்கிறோம். அலுவலகத்தில் ஒரிரு நாள் சம்பளம் தாமதமானால்கூட ஒருசிலர் மன உளைச்சலின் உச்சத்துக்கே சென்றுவிடுவர்.

இந்த உலகில் ஒரு தொழில் செய்து பணம் சம்பாதிப்பவர்களை விட, மாதச் சம்பளம் வாங்குபவர்களே அதிகம். இவர்கள் தங்களது பணத்தை சரியாக நிர்வகிக்கத் தெரியாத காரணத்தால், நிதி நெருக்கடியை சந்திக்கின்றனர். இதற்கு முக்கிய காரணம் பணத்தை எப்படி செலவழிப்பது? எப்படி சேமிப்பது? என்பது குறித்து அவர்களுக்கு போதுமான தெளிவு இல்லாமல் இருப்பதுதான். இந்தப் பதிவில் மாதச் சம்பளம் வாங்குபவர்கள் பொதுவாக செய்யும் 6 நிதித்தவறுகள் என்னென்ன என்பதைப் பற்றி பார்க்கலாம்.

தவறான எண்ணங்கள்: பணத்தைப் பற்றிய தவறான எண்ணங்கள் பலரின் நிதி நிலையை பாதிக்கின்றன. பலருக்கு அதிகமாக சம்பாதித்தால் எல்லா பிரச்சனைகளும் தீர்ந்துவிடும் என்ற எண்ணம் இருக்கும். ஆனால், பணம் மட்டுமே எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு அல்ல. பணத்தை எப்படி நிர்வகிக்கிறோம் என்பதுதான் முக்கியம்.

தவறான செலவுகள்: சம்பளம் வாங்குபவர்கள் முறையாக திட்டமிடாமல் தேவையற்ற பொருட்களை வாங்கிக் குவிப்பார்கள். இதனால், மாத இறுதியில் பணம் இல்லாமல் தவிக்க நேரிடும். எனவே, ஒவ்வொரு மாதமும் என்னென்ன செலவுகள் வரும் என்பதை முன்கூட்டியே கணக்கிட்டு, ஒரு பட்ஜெட் தயாரித்து அதன்படி செலவழிக்க வேண்டும்.

கடன் சுமை: கடன் வாங்குவது தவறில்லை, ஆனால் தேவையற்ற பொருட்களுக்காக கடன் வாங்குவது நிதிச் சிக்கலுக்கு வழிவகுக்கும். கடனை அடைக்க போதுமான வருமானம் இல்லாமல் போனால், கடன் சுமை அதிகரித்துவிடும். எனவே, கடன் வாங்குவதற்கு முன்பு யோசித்து முடிவு எடுக்க வேண்டும்.

அவசரகால நிதியின்மை: அவசர காலத்திற்கு பயன்படுத்திக் கொள்ளும் வகையில் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட தொகையை அவசர நிதியாக ஒதுக்கி வைக்க வேண்டும். இது எதிர்பாராத செலவுகள் ஏற்படும் போது நமக்கு உதவியாக இருக்கும்.

முதலீடு செய்யாதது: சம்பாதிக்கும் பணத்தை முழுமையாக செலவழித்துவிடாமல், அதில் ஒரு பகுதியை முதலீடு செய்ய வேண்டும். இது எதிர்காலத்தில் நமக்கு நல்ல வருமானத்தைத் தரும்.

காப்பீடு இல்லாமை: உடல் நலம், விபத்து போன்ற எதிர்பாராத சூழ்நிலைகள் ஏற்படும்போது காப்பீடு நமக்கு பெரும் உதவியாக இருக்கும். மாதச் சம்பளம் வாங்குபவர்கள் போதுமான காப்பீட்டு பாலிசிகளை எடுத்து வைப்பது அவசியம்.

மாதச் சம்பளம் வாங்குபவர்கள் மேற்கண்ட நிதித் தவறுகளைத் தவிர்த்து, சரியான நிதித்திட்டமிடலை மேற்கொண்டால், எதிர்காலத்தில் நிதிச் சுதந்திரத்தை அடைய முடியும். நிதி சார்ந்த விஷயங்களில் உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால், ஒரு சரியான நிதி ஆலோசகரை அணுகி, ஆலோசனை பெறுவது நல்லது. நிதி ஆலோசகர் நமது நிதி நிலையை ஆய்வு செய்து, நமக்கு ஏற்ற நிதித் திட்டங்களைப் பரிந்துரைப்பார்.

நம்மில் பெரும்பாலானோர் மாதச் சம்பளமே கதி என வாழ்கிறோம். ஒவ்வொரு மாத இறுதியிலும், 'எப்போது முதல் தேதி வரும்?!' எனத் தவமாய்த் தவம் இருக்கிறோம். அலுவலகத்தில் ஒரிரு நாள் சம்பளம் தாமதமானால்கூட ஒருசிலர் மன உளைச்சலின் உச்சத்துக்கே சென்றுவிடுவர்.

தெரிந்தவர், தெரியாதவர், நண்பர்கள் என, பார்க்கும் அனைவரிடமும் கடன் வாங்கிவிடுவர். இதற்குக் காரணம், ஹகுறைவான சம்பளம்' என்று பலரும் சொல்லலாம். ஆனால், அந்தச் சம்பளத்தை வைத்து சரியான நிதி திட்டமிடலுடன் வாழ்க்கையை சிறப்பாக நடத்துவதுதான் நமது சாமர்த்தியம். இதை வயதுவாரியாகப் பிரித்துப்பார்ப்போமா?

### 20 வயதினர்

பொதுவாக, 20 வயதுக்கு மேல்தான் கல்லூரி வாழ்க்கையை முடித்து, அலுவலகப் பணிக்குச் சென்று கையில் பணத்தைப்



பார்க்கத் தொடங்குவோம். பெறும் சம்பளத்தில், அவர்களுடைய எதிர்காலத் தேவைக்காக எந்த முதலீட்டையும் செய்வதுமில்லை ஓய்வூதியத்துக்குத் திட்டமிடுவதும் இல்லை. 20 வயதில் இருந்தே குறைந்தபட்சப் பணத்தையாவது மாதந்தோறும் முதலீடு எனும் பெயரில் விதைத்துவந்தால், ஓய்வுபெறும் வயதில் அந்தப் பணம் பெரிய விருட்சமாக வளர்ந்து நமக்கு நிழலாக இருக்கும். ஆகவே, வாங்கும் சம்பளத்தில் நம்முடைய முதல் செலவு சேமிப்பாக இருக்கட்டும்.

### 30 வயதினர்

ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் மிக முக்கியமான வயது 30. இந்த வயதில்தான் ஒருவர் தனது எதிர்காலத்தை நிர்ணயித்து, அதற்கு ஏற்றாற்போல் பயணிக்க முடியும். ஆனால், பெரும்பாலானோர் ஒழுங்கமைக்கப்படாத சேமிப்புத் திட்டங்களிலும், தவறான நிதித்திட்டமிடலிலும் பணத்தை முதலீடு செய்து வருமானத்தை இழப்பதோடு, வாழ்க்கையையும் இழக்கின்றனர். மேலும், தேவையில்லாத பொருள்களை அதிக விலைக்கு வாங்கி, பகட்டு வாழ்க்கையைப் பறைசாற்றிக்கொள்ள பணத்தை வீணாக்குகின்றனர். வரும் வருமானத்தில் இப்படியே செலவுகள் செய்துகொண்டிருந்தால், குடும்பப் பொறுப்பு கூடிய பிறகு அதைச் சமாளிக்க வழி தெரியாமல் தவிக்கும் நிலை வந்துவிடும். இதைத் தவிர்க்க, நமக்கும் நம் குடும்பத்துக்கும் ஏற்றதொரு முதலீட்டுத் திட்டத்தைத் தேர்ந்தெடுத்து, நம்மால் முடிந்த அளவுக்கு சேமிப்பது நல்லது.

### 40 வயதினர்

40 வயதினரைப் பொறுத்தவரை அநேகருக்குத் திருமணமாகி, குழந்தைகளுடன்குதுகலமாகவாழ்க்கையை நடத்திக்கொண்டிருப்பர். ஆனால் ஒருசிலர், பெரும்கடன் சுமையில் சிக்கித் தவித்துக்கொண்டிருப்பர். ஏனெனில், கல்விக் கடன், திருமணக் கடன், வீட்டுக் கடன், தொழில் கடன் என ஏதேனும் ஒரு கடனில் சிக்கித் தவிப்பர். கடன் எதுவும் இல்லையென்றால்கூட, வாழ்க்கை முழுவதும் சந்தோஷமாக வாழ்ந்திட எந்த ஓர் எதிர்காலத் திட்டமோ எண்ணமோ இருப்பதில்லை. வாழ்க்கையில் குறிக்கொள் வைத்து வாழ்வதே சிறப்பு!

### 50 வயதினர்

நம்மில் பலர் வாழ்க்கையை ஆண்டு அனுபவித்து வந்தாலும், சிலருக்கு மட்டுமே ஹநம்முடைய ஓய்வுக்காலத்தில் பணம் தேவைப்படும்' என்ற எண்ணமே வரும். அதே சமயம் 50 வயதில்கூட ஹஓய்வூதியம் பற்றிய எண்ணமோ, வாழ்க்கையின் இறுதி நாள்களில் பாதுகாப்பான தருணத்துக்குப் பணம் தேவை. அதற்கு ஏதாவது ஒரு திட்டத்தில் முதலீடு செய்ய வேண்டும்' என்ற எண்ணமோ இருப்பதில்லை. அப்படியே ஓய்வூதியத் திட்டங்களில் முதலீடு செய்வதாக இருந்தாலும், அதிகமாகப் பணம் செலவழித்து முதலீடு செய்வதும் தவறு.

உள்ளூர் முதல் உலக நாடுகள் வரை ஒவ்வொருவரும் மற்றவர்களின் கனவை நிறைவேற்றுவதற்காக அல்லும் பகலும் அயராது உழைக்கிறார்கள். ஒருசிலர் சரியாக உண்ணாமலும் உறங்காமலும் உழைத்துவருகிறார்கள். அதே சமயம் நம்முடைய கனவை நிறைவேற்றுவதற்காக சிறிதளவாவது உழைக்கிறோமோ என்றால், இல்லை என்பதே பதில்.

உழைக்க வேண்டும் என்றால், அலுவலக வேலையை முடித்துவிட்டு ஆறு மணிக்கு மேல் வேறு ஒரு கடையிலோ, அலுவலகத்திலோ சேர்ந்து வேலைசெய்ய வேண்டும் என்பதில்லை. நம்முடைய பணத்தைச் சரியான நிதி சார்ந்த திட்டங்களில் முதலீடு செய்தாலே போதும். நாம் உழைப்பதைப்போல நம்முடைய பணமும் உழைக்கத் தொடங்கி வருமானத்தை வழங்கும். ஆனால், இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை நிதி சார்ந்த பல தவறுகளை அறியாமல் செய்து, வாழ்க்கையைப் பாழாக்கிக்கொள்கின்றனர்.

ஆகையால், நம் வாழ்க்கையை வளமாக்கிட, நிதி சார்ந்த விஷயங்களில் கவனம் செலுத்துவோம்! செழிப்போம்!



# கால்நடை வளர்ப்பில் சாதிக்கும் இளைஞன்

## இளைஞர்களுக்கு முன்மாதிரியாக செயற்படும் சுப்ரமணியம் பிரசாந்த்

பெரியசாமி சுசாந்தனி
ஊடக கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கையின் கண்கவர் இடங்கள் என்றாலே நம் சிந்தனையின்பால் வருவது மலையகமே... தேயிலை.... இறப்பர்... கோப்பி... தெங்கு என வரிசையாக மனங்கவர் இயற்கை சூழலுடன் விளங்கும் மலையகத்தின் மிக முக்கியமான இடமாக விளங்குவது மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டம். இப்பிரதேசம் சுற்றுலா பயணிகளின் விருப்பத்திற்குரிய இடமாக இருந்தாலும், அங்கு வாழும் மக்களுக்கு சற்றே கடினமான சூழலாகவே இருக்கின்றது. கல்வி... சுகாதாரம்... காலநிலையின் போக்கு போன்ற பல நிலைகளிலும் ஒரு கடினமான சூழ்நிலையை கடந்தே அந்த பிரதேச மக்கள் தங்களுக்கான முன்னேற்ற பாதையை அடைகின்றனர்.

அச்சமூகத்தின் முன்மாதிரியான தனித்துவமான ஏனையவர்களையும் ஊக்கமூட்டக்கூடிய விடயங்களை பற்றி பேச வேண்டிய கடப்பாடு எம்மிடம் இருக்கத்தான் செய்கின்றது. அந்தவகையில் நுவரெலியா மாவட்டத்தின் இறம்பொடை பிரதேசத்தின் சு.டீ தோட்டத்தை பிறப்பிடமாகக் கொண்டு, சமூகத்தில் இளைஞர்கள் மத்தியில் சிறந்த முன்மாதிரியாகக் விளங்கக்கூடிய தன்னுடைய இளம் வயதிலேயே கால்நடை தொழிலில் ஈடுபட்டு வரும் ஒருவராக சுப்ரமணியம் பிரசாந்த் என்பவர் புகழாரம் பெறுகின்றார்.

அவர் தன்னுடைய இளம் வயதிலேயே மாடுவளர்ப்பு சுயதொழிலை மேற்கொள்வதன் ஊடாக முன்னேற்றகரமான வாழ்க்கையை நோக்கி பயணித்து வருகின்றார். அவருடை வாழ்க்கை பயணம் சுயதொழில் சார்ந்த அனுபவங்கள் இச்சுய தொழில் சார்ந்து அவர் எதிர்கொள்ளும் சவால்கள் என பல விடயங்கள் சார்ந்தும் அவருடன் கலந்துரையாடும் போது ஆர்வமான ஊக்கமூட்டக்கூடிய பதில்களை பெறக்கூடியதாக இருந்தது.

கேள்வி - எவ்வளவு காலமாக இக்கால்நடை வளர்ப்பு சுயதொழிலில் ஈடுபடுகிறீர்கள்?

பதில் - ஒன்பது வருடங்களாக கால்நடை வளர்ப்பு தொழிலில் ஆர்வம் காட்டி வருகிறேன். எனக்கு 20 வயது இருக்கும்போது இத்தொழிலை ஆரம்பித்தேன். முதலில் எனது தாத்தா பாட்டி இத்தொழில் ஈடுபட்டனர். அப்போது நான் பாடசாலையில் உயர்தரத்தில் கற்றுக் கொண்டிருந்தேன். பாடசாலைக்கு சென்று கல்வி பயிலும் காலத்தில் எனது தாத்தா பாட்டிக்கு கால்நடை வளர்ப்பிற்கு உதவிகளை அவ்வப்போது செய்து கொடுப்பேன். எனது பாட்டியின் இறப்பிற்கு பின்னர் நான் முழுமையாக கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவதாக தீர்மானித்து கிட்டத்தட்ட 9 வருடங்களாக இத்தொழில் ஈடுபட்டு வருகிறேன்.

கேள்வி - சிறுவயதிலேயே இவ்வாறான தொழிலின் மீது ஈடுபாடு வந்தமைக்கான காரணம் என்ன?

பதில் - எனது பெற்றோர் நான் பாடசாலையில் கல்வி கற்ற காலங்களில் தேயிலைத் தோட்டத்தில் பணிபுரிந்தனர். எங்கள் குடும்பத்தில் மொத்தம் எட்டு பேர். எனவே எங்களது தேவையை பூர்த்தி செய்து கொள்ள பெற்றோரின் வருமானம் போதுமானதாக அமையவில்லை. இதனால் குடும்பத்தில் வறுமை நிலவியது. அதேபோல் கல்வியில் ஆர்வம் இருந்தும் அதனை தொடர்வதற்கான சூழல் அப்போது எனக்கு கிடைக்கவில்லை. வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும் குடும்ப சுமையை குறைப்பதற்காகவும் நான் கால்நடை வளர்ப்பில் எனது முழுமையான ஈடுபாட்டினை காட்டினேன்.

கேள்வி - மாடு வளர்ப்பு தொழிலை உங்களுடைய இளம் வயதிலேயே ஆரம்பிக்கும் போது சமூகத்தின் பார்வை மற்றும் உங்கள் குடும்ப ஒத்துழைப்பு எவ்வாறு இருந்தது?

பதில் - நான் இந்த தொழிலை மேற்கொள்ளும் போது சமூகத்தின் பார்வை எதிர்மறையாகவே இருந்தது. இளம் வயதிலேயே கால்நடை வளர்ப்பு மேற்கொள்கின்றீர்கள். வேறு ஏதாவது தொழில் புரியலாம் தானே என்பதைப் போல கருத்துக்கள் வந்தன. ஆரம்பத்தில் குடும்பத்தில் நான் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவதினை விரும்பவில்லை. அவர்கள் எந்தவித ஒத்துழைப்பினையும் வழங்கவும்



இல்லை. மாடுகளை விற்றுவிட்டு வேறு ஏதாவது தொழில் செய் என அப்பா பல தடவை கூறியிருக்கின்றார். இருப்பினும் என்னுள் இருந்த ஆர்வம் அந்த எதிர்மறை கருத்துக்களை கடந்து தொழிலை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு உறுதுணையாக இருந்தது.

கேள்வி - தங்களுடைய முயற்சியில் முன்னேறி வரும் உங்களுக்கு அரசாங்கம் சார்ந்தும் தன்னார்வ நிறுவனங்கள் சார்ந்தும் உதவிகள் அங்கீகாரம் கிடைத்ததுண்டா?

பதில் - ஆரம்பத்தில் இந்த தொழிலை மேற்கொள்ளும்போது எந்தவித உதவிகளும் கிடைக்கவில்லை. என்னுடைய தனிப்பட்ட முயற்சியின் மூலமே இந்த தொழிலை ஆரம்பித்தேன். பின்னர் நான் மாட்டுத் தொழுவம் ஒன்றினை அமைக்க முற்பட்டபோது அரசாங்கத்தின் உதவியுடன் கால்நடை வைத்திய சேவை ஊடாக ஒரு லட்சம் ரூபாய் பணம் கிடைக்கப்பெற்றது. அதனைக் கொண்டும் என்னுடைய சுய முயற்சியின் ஊடாகவும் மாட்டுத் தொழுவத்தினை முறையாக அமைத்துக் கொண்டேன்.

மற்றும் இரு நிறுவனங்களால் “பால் உற்பத்தி முயற்சியாளர்களின் அபிவிருத்தி வேலை திட்டம்” என்ற தொனிப்பொருளின் ஊடாக கால்நடை வளர்ப்பு தொடர்பான பயிற்சிகளும் கால்நடை வளர்ப்பினை நவீன முறையில் மேற்கொள்வதற்கான இயந்திரங்களும் வழங்கப்பட்டன. அதேநேரம் இளம் பாற்பண்ணை உற்பத்தியாளருக்கான சான்றிதல்களும் வழங்கி கௌரவித்தனர்.



அதுமட்டுமல்லாமல் என்னைப்போன்ற இளம் தொழில்முனைவோருக்கான பயிற்சி வழங்கும் பாலுற்பத்தி முயற்சியாளர் என்ற அங்கீகாரமும் ஆழுனு நிறுவனத்தால் வழங்கி வைக்கப்பட்டது.

இதனையும் விட புல் அரைக்கும் இயந்திரம், கால்நடைகளுக்கான விட்டமின், முதலுதவி பெட்டி என்பன வழங்கப்பட்டன. இவ்வாறான அரசு சார்ந்தும் அரசு சாராத நிறுவனங்களில் இருந்தும் பல உதவிகள் கிடைக்கப்பெற்று வருவதால் இத்தொழிலை முன்னேற்றகரமாக மேற்கொள்வதற்கு அவை உறுதுணையாக இருந்து வருகின்றது.

கேள்வி - மாடு வளர்ப்பு சுய தொழிலை தொழில்நுட்ப ரீதியாக மேற்கொள்கின்றீர்கள் இது தொடர்பான முன் அனுபவம் ஏதும் உண்டா?

பதில் - இத்தொழிலை ஆரம்பத்தில் மேற்கொள்ளும்போது நான் பாரம்பரியமான முறையில் கைகளிலேயே தொழிலை மேற்கொண்டேன். பிற்பட்ட காலங்களில் மாடுகள் அதிகரிக்கும் போது அத்தொழிலை இலகுவான முறையில் மேற்கொள்வதற்காக இவ்வாறான தொழில்நுட்ப ரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ள ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் இவ்வாறு ஆரம்பிக்கும் போது தொழில்நுட்ப ரீதியாக மேற்கொள்வது தொடர்பாக முன் அனுபவம் ஏதும் எனக்கு இருக்கவில்லை. அரச கால்நடை வைத்தியர் ஆலோசனைகள் சமூக நிறுவனங்களின் பயிற்சிகள், கருத்தரங்குகள் என்பவற்றின் மூலம் அனுபவத்தை பெற்று தொழில்நுட்ப ரீதியாக இத்தொழிலை மேற்கொள்ள ஆரம்பித்தேன்.

தொடர்ச்சியாக பத்து வருடங்களாக இத்தொழிலை மேற்கொண்டு வருவதன் மூலமும் தொழில்நுட்ப ரீதியாக இதனை ஒரு ஐந்து வருடங்களுக்கு மேலாக மேற்கொள்வதன் மூலமும் கால்நடை வளர்ப்பு தொழிலை தொழில்நுட்ப ரீதியாக மேற்கொள்வது தொடர்பான அறிவு போதுமான அளவு இருப்பதோடு மாடு வளர்ப்பு சுய தொழிலை மேற்கொள்ளும் இளைஞர்களுக்கும் தொழில்நுட்ப ரீதியாக இதனை மேற்கொள்வது தொடர்பான விடயங்களை கற்றுகொடுத்தும் வருகின்றேன்.

கேள்வி - இச்சுயதொழிலை மேற்கொள்ளும் போது எவ்வாறான சவால்களை எதிர்கொண்டீர்கள் கொள்கின்றீர்கள்?

பதில் - தொழிலை மேற்கொள்ளும் போது ஆரம்பத்தில் இருந்து பல்வேறான சவால்களுக்கு உட்பட்டு இப்போது இந்த நிலையை அடைந்திருக்கின்றேன். குறிப்பாக ஆரம்பத்தில் ஆரம்பிக்கும் போது பொருளாதார ரீதியான சிக்கல்கள் எந்தவித ஒத்துழைப்பும் இல்லாத காரணத்தினால் இதனை மேற்கொள்வதற்கான பணம் ஆரம்பத்தில் பெரிய சவாலாகவே இருந்தது.

இதனையும் விட நண்பர்கள் மற்றும் சமூகத்தின் கேலிப் பேச்சு அதிகமாக காணப்பட்டது. இருந்தாலும் கூட அவற்றிற்கு முகங்கொடுத்து ஒரு முன்னேற்ற பாதையை நோக்கி வந்து கொண்டிருக்கின்றேன்.

இதனையும் விட கால்நடைகளுக்கு ஏற்படுகின்ற வைரஸ் நோய்கள் காரணமாக இத்தொழிலை மேற்கொள்வது சிரமமாக உள்ளது. காலநிலை மாறும் காலங்களில் குறிப்பாக கடுமையான மழை மற்றும் கடுமையான வெயில் காலங்களில் மாடுகளுக்கு உணவினை பெற்று கொடுப்பதில் சிரமம் ஏற்படுகின்றது. குளிர்காலங்களில் மாடுகளுக்கு சேற்றுப்புண் உருவாகுதல் அதற்கான மருத்துவ செலவுகள் என அதிகமாக சவால்கள் காணப்படுவதினால் சிரமத்தை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

இவ்வாறாக பொருளாதாரம் சார்ந்தும் கால்நடைகளின் சுகாதாரம் சார்ந்தும் சமூகத்தின் கேளிக்கையான பேச்சுகள் மற்றும் ஏளனப்படுத்தும் விதமான நடத்தைகள் என பல்வேறான சவால்களை எதிர்கொண்டு இந்த தொழிலை வெற்றிகரமாக மேற்கொண்டு வளர்ச்சியடைந்ததில் பெருமிதம் கொள்கிறேன்.

கேள்வி - இத்தொழில் ஆரம்பிக்கப்படும் போது இருந்த நிலை பற்றியும் தற்போதுள்ள நிலை பற்றியும் உங்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்..

பதில் - ஆரம்பத்தில் ஒரு ஆர்வத்தின் பேராகவே இத்தொழிலை நான் ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் என் தாத்தா பாட்டியுடன் இணைந்து செயல்படும் போது எங்களுக்கு இரண்டு கறவை பசுக்கள் இருந்தன. தற்போது என்னிடம் 10 கறவை பசுக்களும் ஆறு கன்றுகளும் உள்ளன. ஆரம்பத்தில் தொழில்நுட்ப வசதி இன்றி இத்தொழிலை மேற்கொண்டேன். தற்போது தொழில்நுட்ப வசதியுடன் கால்நடை வளர்ப்பினை மேற்கொள்வதனால் அதிக வருமானம் ஈட்டிக் கொள்ளக் கூடியதாக காணப்படுகின்றது.

ஆரம்பத்தில் உடல் உழைப்பு அதிகமாக இருந்தமையினால் அதிகமான வேலைப்பளு காணப்பட்டது. அதேநேரம் தற்போது இயந்திர வசதிகளுடன் இத்தொழிலை நான் மேற்கொண்டு வருகின்றமைனால் வேலைப்பளு குறைவாகவும் நேர செலவு குறைவாகவும் இருக்கின்றது.

கேள்வி - இளம் வயதிலேயே இவ்வாறான சுய தொழில் ஈடுபடும் இளைஞர்களுக்கு நீங்கள் வழங்கக்கூடிய அறிவுரை என்ன?

பதில் - இன்றைய காலத்தை பொருத்தவரையில் இளைஞர்கள் பலர் வேலைவாய்ப்பினை தேடி அலைகின்றனர். அவ்வாறின்றி நாம் சுய தொழில் ஒன்றை மேற்கொள்ளும் போது நாமே முதலாளியாக இருக்கக்கூடிய நிலை காணப்படும். இன்றைய காலகட்டத்தை பொறுத்தவரை பல இளைஞர்கள் இவ்வாறான கால்நடை வளர்ப்பு போன்ற சுய தொழில்களில் ஈடுபட ஆர்வம் காட்டி வருகின்றனர். வினைத்திறனான தொழில் நுட்பத்துடன் கால்நடை வளர்ப்பு மற்றும் ஏனைய சுய தொழில்களையும் மேற்கொள்ளும் போது நிச்சயமாக நல்ல வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடிவதுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் என்னால் முடிந்த பங்களிப்பினை வழங்க முடியும்.

கேள்வி - இம்மாடு வளர்ப்பு சுயதொழில் சார்ந்து உங்களுடைய எதிர்காலத்திட்டங்கள் பற்றிய நோக்கு நிலை என்ன?

பதில் - இப்போது என்னிடம் உள்ள மாட்டுத்தொழுவத்தினை எதிர்காலத்தில் விஸ்தீரணம்செய்து அதிகளவான மாடுகளை வளர்க்க ஆசைப்படுகிறேன். அதேபோல் மாதாந்தம் 3000 லிட்டருக்கு அதிகமான பாலினை உற்பத்தி செய்யும் அளவுக்கு கால்நடைகளை வளர்க்க வேண்டும் என்ற எண்ணப்பாடும் முயற்சியும் அதிகமாகவே என்னிடம் உள்ளது. எதிர்காலத்தில் பால் சார்ந்த உற்பத்திகளை (தயிர், யோகட், சீஸ்) உற்பத்தி செய்து விநியோகம் செய்யும் நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்கவும் எத்தணித்துள்ளேன்.

இவ்வாறான பல திட்டங்களையும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த நினைத்து இருப்பதோடு அதனை நடைமுறைப்படுத்துவதற்கான உடல் உழைப்பையும் முழு முயற்சியையும் மேற்கொண்டே வருகின்றேன்.

# காட்டுக்கந்தோரும் வெளவால்களின் கச்சேரியும்....

**யாழ்ப்பாணத்தின் நகர்ப்புற பகுதிகள் தொங்கிக் கொண்டிருந்த அந்த வெளவால்கள் எவ்வாறு காணாமல் போயின ?. வீதி அகலிப்பு என்ற பெயரில் பழமையான நூற்றாண்டு மரங்கள் தறிக்கப்பட்டதன் விளைவாக அவை தம் வாழ்விடங்களை இழந்துவிட்டன.**

**ஒரு தேசத்தின் வரலாற்றுத் தொன்மையை கூறுபவையாக அந்த தேசத்தின் மரங்களும் பறவைகளும் விலங்கினங்களுமே பழம்பெரும் கட்டிடங்களுமே முக்கிய காரணிகளாக காணப்படுபவை. அவ்வாறு தொன்மை மிக்க மரங்களும் அழிக்கப்பட்டு விட்டன. தொன்மை மிக்க மரங்களை நம்பி வாழ்ந்த பறவை இனங்களும் தங்கள் வாழ்விட மரங்களை இழந்ததனால் சின்னாபின்னமாகி இருப்பிடங்களை இழந்து தவிக்கின்றன.**





லதா கந்தையா

நரி போன்ற முகத்தினையும் பறக்கும் சிறகுகளையும்கொண்ட பறவை வெளவால். இதன் முன்னங்கால்கள் தான் அவற்றின் சிறகுகளாகவும் மாறியுள்ளன. இதனை குட்டிகளை ஈன்று பால்கொடுப்பதால்விலங்கு என்பதா? சிறகுகளை கொண்டிருப்பதால் பறவை என்பதா ? என்ற கருத்து வாதங்கள் இருந்தாலும், இது ஒரு பறக்கும் பாலூட்டிப் பறவை. இதனாலேயே இதனை குடுஜபேு குழுஓ என அழைக்கிறார்கள். இதனை தமிழில் வெளவல் என்றும் அழைக்கப்படுகின்றது.

மரத்தின் பழங்களையும் வண்டுகள் பூச்சிகளையும் உண்ணும் இயல்பு கொண்ட இந்த வெளவால்கள் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட வகைதொகைகளோடு உலகின் பல்வேறு பகுதிகளிலும் பரந்து வாழ்கின்றன.

சில நாடுகளில்காணப்படும்வெளவால்கள் மனித இரத்தத்தினையும் மிருகங்கள் மற்றும் பறவைகளின் இரத்தத்தினையும் உறிஞ்சிக் குடிக்கும் இயல்பு கொண்டவையாக காணப்படுகின்றன. இதன் காரணத்தை வைத்துத்தான் இரத்தக் காட்டேரிக் கதைகள் பல உருவாகி பயமுறுத்தவும் செய்தன. இந்தக்கதைகளை உருவாக்கியோர்பயத்தை மட்டுமன்றி வெளவால்களை சமுகத்தின் சாபம்எனவும்பரப்பலாயினர். ஆனால்ஆசிய நாடுகளில் அவ்வாறு மனித இரத்தத்தினை உறிஞ்சும்வெளவால்கள் இல்லை என்பதால் பயப்படத் தேவையில்லை.

வெளவால்களிலே அளவில் சிறிய இன வெளவால்களும் உண்டு பெரிய இன வவ்வார்களும் உண்டு.

ஆசிய நாடுகளில்ஒன்றான இலங்கையின் யாழ்ப்பாணத்திலே கச்சேரி அதாவது யாழ்ப்பாண மாவட்ட செயலகம், மற்றும் பழைய பூங்கா வீதி, காட்டு கந்தோர் என அழைக்கப்பட்ட தற்போதைய யாழ்ப்பாண



மாவட்ட பிரதேச செயலகம் போன்ற பகுதிகளினை உள்ளடக்கிய வீதிகளின் இருமருங்கும் இருந்த பெருமரங்களிலே இன்றைக்கு 15 வருடங்களுக்கு முன் பயணிக்கும் போது இந்த வெளவால்களின் பெருக்கத்தினையும், அவற்றின் தலைகீழாக தொங்கிய நிலையினையும் ,,அவை ஏற்படுத்தும் ஒருவித கீச்சுடல்களையும் காண முடியும். ஆனால் முப்பது வருடங்களுக்கு முன்பு எனது சிறு வயதில் இந்த பாதையால் பயணிக்கும் போது. வெளவால்கள் தொடர்பான காட்டேரி கதைகள் ஒருவித அச்சத்தை தோற்றுவித்ததுண்டு. ஆனால் இங்கு காணப்பட்ட வெளவால்கள் அச்சுறுத்தும் மனித குலத்துக்கு தீங்கு விளைவிக்கும் காட்டேறிக்கதையில் வரும் மனித இரத்தத்தை உறிஞ்சும் வெளவால்களாக இருந்ததில்லை. இவை பழந்தின்னி வெளவால்களாக இருந்தபோதும் வெளவால்களின் சத்தமும் தலைகீழாக தொங்கும் தோற்றமும் பயத்தை தோற்றுவித்ததுண்டு.

இந்த பழந்தின்னி வெளவால்களும் முதுகெலும்புள்ள பாலூட்டி இனத்தைச் சேர்ந்தவை. இவை பழங்களையும்

வண்டுகள் பூச்சிகளையும் உண்ணும் இயல்பு கொண்டன, பகல் முழுவதும் தலைகீழாக தொங்கி கொண்டு ஓய்வெடுக்கும் இந்தப்பறவைகள், தங்கள் சிறகுகளை விசிறியாக பாவித்து தம்மீது தாக்கும் வெப்பத்தில் இருந்து பாதுகாத்துக்கொள்ளும் இயல்புள்ளவை. மெல்லிய பழங்களை முற்று முழுதாக உறிஞ்சி உண்ணும் இயல்பு கொண்ட இவை வாயினால் உண்டு தமது வாயினாலேயே கழிவ கற்றல்களையும் மேற்கொள்கின்றன

யாருக்குமே இடையூறு விளைவிக்காமல் மரங்களில் மட்டுமன்றி மின்சாரக்கம்பிகளில் கூட ஓய்வெடுக்கும். இந்த வெளவால்கள் தம்மை இரையாக்கிக்கொள்ளும் பறவைகளிடமிருந்து தப்பித்துக்கொள்ளும் தந்திரத்தோடு தலைகீழாகத்தான் தொங்கி ஓய்வெடுக்கும். இவை இரவிலே தான் நமது உணவு தேடும் திருவிளையாடல்களையும் ஆரம்பிக்கும்.

வெளவால்கள் கூட்டம் கூட்டமாகத் தான் பறந்து செல்லும். தன் பறப்பு இடத்துக்கு எதிரே தடைகள் வரும்போது அவற்றை அறிந்து கொள்வதற்கு. மீ ஒலி

( மிகையான ஒலி )அலைகள் உதவுகின்றன அதாவது ஒளியின் அதிர்வுகளை கணக்கிட்டு அவற்றுக்கு எதிரே வரும் தடைகளை அறிந்து கொள்கின்றன. பறந்து செல்லும் பதையில் குறுக்கிடும் தடைகள் தனது பயணத்துக்கு ஒவ்வாத நிலையாக இருப்பதை உணர, அவை எழுப்பும் சத்தத்தினால் எதிரே உள்ள தடையின் மீது மோதி அவற்றுக்கு எளிதாக உணர உதவுகின்றன. இந்த உத்தி அவற்றின் பயணத்தை இலகுவாக்குகின்றது.

இந்த மீ ஒலி அதிர்வுகளை மனிதர்கள் தமது சாதாரண செவிகளினால் கேட்க முடியாது ஆனால் குழந்தைகள் இந்த சத்தத்தினை கேட்கும் திறன் உடையவை. இதனாலேயே இரவு நேரங்களில் குழந்தைகள் இவை எழுப்பும் இந்த சத்தத்தினால் திடுக்கிட்டு அழும் இயல்போடு இருப்பதை காண முடிகிறது. என ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். மனிதர்கள் 80 தொடக்கம் 20 ஆயிரம் அதிர்வெண் அலைகள் கொண்ட சத்தத்திலேயே கேட்க முடியும் . ஆனால் வெளவால்கள் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட அதிர்வு ஒலிகளை கேட்கும் சக்தி உடையவை. எழுப்பும் சக்தியும் உடையவை. இந்த சத்தத்தினை மனிதர்களால் கேட்க முடியாது. ஆனால் நாய்கள் அந்த சத்தத்தினை செவிமடுக்க முடியும்இதன்விளைவுகளாலே தான்இரவில் நாய்களும் ஆள் அரவமற் நேரத்திலும் குறைக்கும் தன்மையுடையவையாக காணப்படுகின்றன.

வெளவால்கள் 14 மீட்டர் தொலைவில் தடைகள் இருக்கும் போது இந்த மீ ஒலியை எழுப்பி அதன் அதிர்வுகளின் மூலம் உணரும் சக்தியை பெற்று தமது பயண பாதைகளை மாற்றும் தன்மைகளைக் கொண்டிருக்கின்றன. அது மட்டுமின்றி தமக்கு. போட்டியாக வரும் வெளவால்களிடம் இருந்து தமது இரையை தற்காத்துக் கொள்வதற்காகவும் அவற்றைக் குழப்பும் விதமாகவும் இந்த மீ ஒலிகளை ஏற்படுத்தி தமக்கான இரையை அவை தம் வசப்படுத்திக் கொள்ளும் தந்திர சக்தி கொண்டதாகவும் காணப்படுகின்றன.

மட்டுமின்றி இந்த வெளவால்களிடம் இருந்து பூச்சிகளும் ஜித்தனுக்கு சித்து விளையாட்டுக்காட்டுவது போல ஒருவித சத்தத்தை எற்படுத்தி அவற்றை திசை திருப்பிவிட்டு தப்பிக்கும் இயல்பும் கொண்டிருக்கின்றன.

வெளவால்கள் உணவை உட்கொள்வதும் கழிவகத்தை மேற்கொள்வதும் வாய் வழியாகவே என முன்னர் குறிப்பிட்டு இருந்தேன். இந்த பறவையின் கழிவுகள் புயனோ என்று அழைக்கப்படுகின்றன. இவற்றின் கழிவுகளிலே மிகுந்த புரதச் சத்து நிரம்ப பெற்றுள்ளதாக பயனாளிகள் குறிப்பிடுகிறார்கள். மாட்டெரு, ஆட்டெரு ,கோழி எரு போல இந்த வெளவால் பறவையின் கழிவும் விவசாய நடவடிக்கைகளுக்கு சிறந்த பசளையாக பயன்படுத்தப்படுகின்றது.

வெளிநாடுகளிலே இவற்றின் பசளை இலாபம்ஈட்டும்வருமானமாக விளங்குகிறது. இதற்காகவே கோழிக்கூடுகளைப்போல குகைகளையும் மரங்களையும் பயன்படுத்தி இதன் உரங்களை தயாரித்துக் கொள்ளும் வழிமுறைகளும் அங்கு காணப்படுகின்றன.

பாழடைந்த கட்டிடங்கள் குகைகள் மரப்பொன்றுகளில் வாழக்கூடிய வல்லமை கொண்ட இந்த வெளவால்கள். மனித குல மேன்மைக்கு உறுதுணையாக விளங்குகின்றன. மனிதனுக்கு மட்டுமின்றி உலக உயிர் வாழ்தலுக்கும் பூமியின் இலவசமாக விதைகளை விதைக்கும் பசுமையின் முன்னோடியாகவும் இந்த பறவை விளங்குகின்றது இது பூமிக்கு இலகுவான முறையில் ஓரிடத்தில் இருந்து இலவசமாக வித்துக்களை நீண்ட தொலைவுக்கு பரப்பி தாவர விருத்திக்கு காரணமாகின்றது.

பூமியை நேசிக்கும்இந்த பறவையைக்கூட மனிதர்கள் விட்டு விடவில்லை அவற்றை உணவாகவும் உட்கொள்ளுகின்றார்கள். வியட்நாம் பசிபிக் . பப்புவா நீயூக்கினியா ,ஆப்பிரிக்கா ஐரோப்பா, தாய்லாந்து இந்தோனேசியா , சீனா பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலும் இலங்கையின் சில இடங்களிலும் வெளவால்களை உணவாக உட்கொள்ளும் இயல்புடையவர்கள் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்கள். இந்த பறவைகளை பெருமளவு உணவாக உட்கொள்ளும் இயல்பு கொண்ட சீனர்களை கடந்த கொரோனா தாக்க காலத்தில் எல்லோரும் சபித்துக் கொண்டது ஞாபகம் இருக்கட்டும். இதன் மூலமாக வைரஸ் நோய்கள் பரவுவதாகவும் அதன் தாக்கம்

தமிழர் பொருணமியம்
வாரமலர் TAMILS ECONOMY

அதிகம் இந்த உலகத்தை தாக்கியதாகவும். கூறப்படுகின்றது இது ஒரு வகையில் உண்மையாக இருந்த போதிலும். இதன் மூலமாக பெருமளவு தாக்கங்கள் இல்லை என்பதே சுற்றுச் சூழலியலாளர்களின் கருத்தாக இருக்கின்றது. இது மருந்து மாபியாக்களின் கட்டுக்கதை என்றும் ஒருசாரார் விசனமுறுகிறார்கள்.

வௌவால்களை மனிதர்களுக்கு ஆபத்தான பறவையாக கருதி பல கருத்துக்கள் வெளியிடப்பட்ட போதும் இவை தாவரங்களுக்கும் மனிதர்களுக்கும் தீங்கு செய்யும் வண்டுகள் பூச்சிகளை அழிக்கும் வல்லமை உடையவையாக விளங்குகின்றன. ஒரு வௌவால் ஒரு மணி நேரத்தில் 500க்கும் மேற்பட்ட வண்டுகளை உண்ணும் இயல்பு கொண்டவையாக காணப்படுகின்றது. மட்டமன்றி நுளம்புகளையும் உண்ணும் இயல்பு கொண்டவையாக இவை விளங்குகின்றன.

இவ்வாறு பல்வேறு வகையில் பூமிக்கும் மனிதகுல மேன்மைக்கு காரணமாக இருந்த இந்த வௌவால்களை கிருமிகளை பரப்பும் ஒரு காரணியாக தெறிக்க விடுவதானது இன்று நேற்றல்ல பதினைந்தாம் நூற்றாண்டிலேயே ஆரம்பமாகிவிட்டது. அதன் பின்னரே கைத்தொழிற்புரட்சிக்காலம் தோன்றியது. கைத்தொழிற்புரட்சிக்காலத்தின் போதே காடுகள் களனிகள் மலைகள் என பல வளங்களும் இரும்புக்காக நிலக்கரிக்காக விவசாயத்துக்காக வகைதொகையற்று அழிக்குள்ளாகின. மனிதன் தான் செய்யும் அபிவிருத்தி என்ற பசுமையின் நிலக்கட்டமைப்பு மாற்றங்களை உருவாக்க மேற்கொள்ளும் தந்திரோபாயத்தின் போதெல்லாம் வௌவால்களை பலியாக்கிக்கோள்கிறான். அன்று இரத்தக்காட்டேரி. இன்று கொரோனா என அச்சுறுத்த வௌவால்களை பலியிடுகிறான். ஏனெனில் ஒரு அச்சுறுத்தல் காரணமாக உலக அழிவை அரங்கேற்றுவதாலாகும்.

யாழ்ப்பாணத்தின் நகர்ப்புற பகுதிகள் தொங்கிக்கொண்டிருந்த அந்த வௌவால்கள் எவ்வாறு காணாமல் போயின ?. வீதி அகலிப்பு என்ற பெயரில் பழமையான நூற்றாண்டு மரங்கள் தறிக்கப்பட்டதன் விளைவாக அவை தம் வாழ்விடங்களை இழந்துவிட்டன.

ஒரு தேசத்தின்வரலாற்றுத்தொன்மையை கூறுபவையாக அந்த தேசத்தின் மரங்களும் பறவைகளும் விலங்கினங்களுமே பழம்பெரும் கட்டிடங்களுமே முக்கிய காரணிகளாக காணப்படுபவை. அவ்வாறு தொன்மை மிக்க மரங்களும் அழிக்கப்பட்டு விட்டன. தொன்மை மிக்க மரங்களை நம்பி வாழ்ந்த பறவை இனங்களும் தங்கள் வாழ்விட மரங்களை இழந்ததனால் சின்னாபின்னமாகி இருப்பிடங்களை இழந்து தவிக்கின்றன.

ஒரு திட்டமிடலை மேற்கொள்ளும்போது



அந்தத் திட்டமிடலினால் பாதிக்கப்படும் உயிரினங்களை பாதுகாக்கும் வல்லமை கொண்ட சிந்திப்புகள் இருப்பதில்லை.

இந்த தொன்மைமிகு பல்லுயிர்களை பாதுகாக்கும் ஒரு மனித சக்திகளாக இருப்பதில்லை. அவற்றின் வாழ்விடங்களை

பிறிதொரு இடத்தில் அமைத்துக்கெ ாடுப்பதற்கும் முயற்சிப்பதில்லை பல்வேறுபட்ட நாடுகளிலே பல்வேறுபட்ட நகராக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அங்கே அந்த நாட்டுக்குரிய தொன்மங்கள் எப்போதுமே அழிக்கப்படுவதில்லை .

அந்த நாட்டுக்குருகிய பறவை இனங்கள் எப்போதுமே அழிக்கப்படுவதில்லை அந்த நாட்டுக்குரிய. தனித்துவங்களை பேணும் வகையிலேயே திட்டமிடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளான இந்தியா. இலங்கை போன்ற நாடுகளிலே இவ்வாறான திட்ட முடல்கள் இல்லாது போகின்றன ஆனாலும் இந்த நகராக்கத் திட்டமிடலிலே வௌவால்களை பாதுகாக்கும் ஒரு நகரமாக இந்தியாவின் மும்பை நகரம் விளங்குகிறது என்றால். யாருமே நம்ப போவதில்லை ஏனெனில் அங்கு வௌவால்கள் வாழக்கூடிய குகைகளை. பராமரித்து பேணி அதன் மூலமாக வருமான ஈட்டல்களை அங்கு மேற்கொள்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

.யாழ்ப்பாண நகராக்கத்தில் வீதி அகலிப்பிற்காக மரங்களை தறித்தது மட்டுமன்றி, உயர்ந்த கட்டடங்கள் இங்கு உருவாகி, யாழ்ப்பாண ,நிலக்கட்டுமானத்துக்கு

மீறிய வகையில் உயர்ந்து கொண்டும் இருக்கின்றன. இதன் காரணத்தால் மீ ஒலி அதிர்வுகளின் மூலமாக தமது திசைகளை கண்டறியும் இந்த வௌவால் பறவைகள் தமது. பயண பாதையில் திடீரென தோன்றிய இந்தத்தடைகளால்

குழப்பங்களை சந்தித்ததன் விளைவாகவும் அவை தம் இருப்பிடங்களை விட்டு இடம் நகர்ந்து கொள்ளும் ஒரு துர்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டு விட்டன. சரியான திட்டமிடல்களையும் சரியான வகையில் இவற்றின் பாதுகாப்புகளையும் பேணாததாலும் தொன்மை வடிவங்களை இழந்துபோகிறது யாழ்ப்பாண மண்.

பிறிதொரு இடத்தெரிவை இந்தப்பற வையினத்துக்கு உருவாக்காத வகை மட்டுமன்றி யாழ்ப்பாணத்து புத்திஜீவிகள் ஒன்றுபட்டு மேற்கொள்ளாத பல்வேறுபட்ட சுற்றுச்சூழல் சார்ந்த விடயங்கள், மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த கரிசனைகள் இல் லாமை காரணமாக பல்வேறுபட்ட தொன்மை சின்னங்கள், தொன்மையான விலங்குகள் தொன்மையான மரங்கள்,, தொன்மையான பறவையினங்கள் அருகி அழிவுற்று வருகின்றன.

பண்பாட்டுத்தொன்மை மிகு மரங்களும், நில அடையாளத்தையும் வரலாற்று புகழ்மிக்க சான்றுகளாவும் விளங்கும் நூற்றாண்டு மரங்களும் அழிக்கப்பட்டு விட்டன. அவற்றை நம்பி வாழ்ந்த வௌவால்களைப்போன்ற பறவையினங்களும் அருகிப்போகின்றன. உண்மையில் அவற்றுக்கு பிறிதொரு இடத்தினை தெரிவு செய்து அவற்றை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் கூட ஈடுபடு காட்டவில்லை. இதன் காரணத்தால் தொன்மை மிக்க பல. உண்மைச்சான்றுகள் அழிவடைந்து கொண்டே இருக்கின்றன இது ஒரு வரலாற்று துயரம் மிக்க புத்திக் குறைவாகும். இயற்கைச்சான்று ஆதாரங்க ளின் இழப்பு. இவற்றின் பூர்வீகப் பெறுமதியை நாளைய சந்ததிகள், நாளைய யாழ்ப்பாணத்து குழந்தைகள், நாளைய பூர்வீக குல மக்களின் பிள்ளைகள் இந்த ஆதாரங்களை கதைகள் மூலமாகவும் கட்டுரைகள் மூலமாகவும் தான் அறிந்து கொள்ளப் போகிறார்கள் என்பது ஒரு துயரம் மிக்க பதிவாகும்

## றப்பர் பாலில் விழுந்து மறைந்த கண்ணீர் - 04

# இரு நூற்றாண்டு கால றப்பர் தோட்ட தொழிலாளர்களின் சோகக் கதை

சங்கா சிங்ஹ ஆரச்சி

சில காலம் மத்துகமை பிரதேசத்தின் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிநிதியாக இருந்து அண்மையில் காலஞ்சென்ற முன்னாள் இராஜாங்க அமைச்சரான பாலித்த தொவரப்பெரும மீது தோட்ட தொழிலாளர்கள் மத்தியில் சிறந்த நன்மதிப்பினை காணக்கூடியதாயில்லை. அது அவர் தோட்ட தொழிலாளர்கள் மீது பலாத்காரத்தினையும் வன்முறையினையும் பிரயோகித்த காரணத்தினால். இச்செயல்பாடு தோட்ட தொழிலாளர்கள் மத்தியில் அவர் மீதான மதிப்பிறக்கத்திற்கு பிரதான காரணியாக அமைந்தது. மொனராகலை றப்பர் தோட்ட தொழிலாளர்களும் தம்மை சுற்றியிருக்கின்ற கிராமங்களை மிகுந்த அச்சத்துடனே கடந்து பெரும்பான்மை தமிழர்கள் வசிக்கின்ற பதுளை மாவட்டத்தின் பஸ்ஸரை மற்றும் லுனுகலை நகரங்களை நோக்கிச் செல்கின்றனர். சிங்கள கிராமங்களை மிக விரைவில் கடந்து சென்றவுடனே அவர்களது மனம் ஆறுதலடைகின்றதென தெரிவிக்கின்றனர்.

### தொழிலாளர்களுக்கெதிரான வன்முறைகள்

பொருளாதாரம் மற்றும் தொழில் நிபந்தனைகளுடாகவும் அதேபோல் தேசிய இனநெருக்கடியூடாகவும் தொழிலாளர்களுக்கெதிரான வன்முறைகள் வரலாற்று முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. சுதந்திரத்தின் பின்னர்





இந்நிலைமை மோசமாக அதிகரித்ததுடன் தொழிலாளர்களின் உரிமைகளுக்கெதிராக சம்பவமொன்று அண்மையில் துன்ஹிந்தை பெருந்தோட்ட நிறுவனத்திற்கு சொந்தமான தும்பறை தோட்டத்தில் பதிவாகியுள்ளது. 'கடந்த மே மாதம் 6ம் திகதி தனது கணவர் வேலைக்கு வரவில்லையென்ற காரணத்தினால் தோட்ட பொது முகாமையாளர், கள உத்தியோகத்தர் மற்றும் காவற்காரர் இணைந்து பெண் தொழிலாளரொருவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இத்தாக்குதல் காரணமாக அவர் மூன்று நாட்கள் ஹொரனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

கிரிஎல்ல பொலிசில் முறைப்பாடு செய்தும் நாண்கு நாட்கள் வரை குற்றவாளிகளை கைது செய்யாமல் பல பொய்களை கூறிக்கொண்டு பொலிசார் சட்ட நடவடிக்கைகளை தட்டிக்கழித்தனர். ஆனாலும் சிவில் சமூகம், அரசியல் மற்றும் கிராமவாசிகளின் அழுத்தம் காரணமாக குற்றவாளிகள் பொலிசில் சரண டைந்தனர். நீதிமன்றில் ஆஜர் படுத்தியப் பின்னர் பொலிஸ் பிணை வழுங்கலுக்கு எதிர்ப்பு தெரிவிக்காத காரணத்தினால் விடுதலை செய்யப் பட்டனர்" எனவும் அதேவேளை அவர்களுக்கெதிராக தொடுக்கப்பட்ட வழக்கு தொடர்ந்து கொண்டு நடத்தப்படுமெனவும் அரசியல் செயற்பாட்டாளர் சந்திரகுமார் தெரிவிக்கின்றார். இதற்கு சமமான சம்பவமொன்று தும்பர தோட்டத்திற்கு அண்மையிலுள்ள தெலதுர தோட்டத்திலும் இடம்பெற்றுள்ளது.

தனது மனைவி தோட்டத்தில் பால் வெட்ட வராத காரணத்தினால் அவரது கணவர் மீது தெலதுர தோட்ட காவற்காரர் தனது இரு ரவுடிகளுடன் இணைந்து அவர் மீது கொடூரமாக தாக்குதல் நடத்தியுள்ளனர். சந்திரகுமார் போன்றோர் காட்டிய எதர்ப்பின் காரணமாக அவர்களுக்கு பிணை மறுக்கப்பட்டு இரு வாரங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

'காவற்காரர் உட்பட அவரது ரவுடிகள் என் கணவரின் தலை நொறுங்கும் வகையில் பியர் போத்தலில் தாக்கியுள்ளனர். ஐந்து நாட்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். மூன்று நாட்களாக பொலிஸ் எதுவும் செய்யவில்லை. பின்னர் குற்றவாளிகள் மூன்று பேரையும் பிடித்து நீதிமன்றில் ஒப்படைத்தனர். தும்பறையில் போல் அவர்களால் இங்கு பிணை எடுக்க முடியவில்லை. நாம் சட்டத்தரணியூடாக விடயங்களை தெளிவுபடுத்தி பிணை கொடுப்பதை எதிர்த்தோம்."

தோட்ட நிர்வாகத்தினரின் இவ்வாறான சண்டித்தனங்களுக்கு தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக முகம்கொடுக்க வேண்டியுள்ளது. அதேபோல் 1977, 1981 மற்றும் 1983 காலப்பகுதியில் அரச அனுசரணையில் நிகழ்த்தப்பட்ட தமிழர்களுக்கெதிரான வன்முறைகளில் பெரும்பாலும் தோட்ட தொழிலாளர்களே பாதிக்கப்பட்டனர்.

இரத்தினபுரி, கிரிஎல்ல, நேபட, மத்துகம, காலி, குருணாகல், கேகாலை போன்ற தோட்டங்களில் லயன் அறைகளை தீ வைத்தல், கோவில் மற்றும் தேவாலயங்கள் மீதான தாக்குதல்கள், கொள்ளையடித்தல்,



பெண்களுக்கெதிரான பாலியல் பலாத்காரங்கள், காயப்படுத்தல் மற்றும் கொலை செய்தல் போன்ற பல்வேறு தகவல்களை அறிந்து கொள்வதற்கு பின்னர் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவினால் அமைக்கப்பட்ட சன்சொனி ஆனைக்குழுவினால் முடிந்தது. அவ் அறிக்கைக்கேற்ப 1977 ஆகஸ்ட் வன்முறைச் சம்பவங்களினால் 500க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொலை செய்யபப்பட்டுள்ளனர்.

பி.பெருமாள் கேகாலை, பின்தெனிய தோட்டத்தில் றப்பர் பால் வெட்டும் தொழிலாளியாவார். தான் சந்தித்த துயரங்களை சன்சொனி ஆணைக்குழு முன் இப்படி தெரிவிக்கின்றார்: ‘ஆகஸ்ட் 19ம் திகதி குழுவொன்று வந்து லயமொன்றை தாக்கிவிட்டுச் சென்றனர். மறுநாள் இன்னுமொரு கூட்டம் வந்து தாக்கியது. 41 லயன் அறைகளைக் கொண்ட நாண்கு லயன் வரிசைகள் இத்தாக்குதல்களுக்கு இலக்காகின. அவற்றை கொள்ளையடித்தனர். குடும்பத்திலுள்ளவர்களை தாக்கினர்.”

நெலும்தெனிய, கஸ்நாவ தோட்டத்தில் வசித்த பெண் தொழிலாளியான செல்வரானி என்ற பெண் கிராமத்தவர்களினால் கூட்டாக பாலியல் வல்லுறவு செய்யப்பட்டதாக சன்சொனி ஆணைக்குழு முன் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 19ம் திகதி தாக்குதல் நடத்தப்படக் கூடுமென்றும் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்லுமாறும் தோட்ட முகாமையாளரால் தொழிலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி தனது தாயுடன் தோட்டத்தின் எல்லையில் அமைந்திருந்த குணபாலவின் வீட்டுக்குச் சென்றிருந்தார். அன்றிரவு குணபாலவின் வீட்டை நோக்கி வந்த காடையர் கூட்டம் செல்வராணியையும் அவரது தாயாரையும் தாக்கி பின்னர் செல்வராணியை குணபாலவின் வீட்டின் பின்புறத்திற்குச் தூக்கிச் சென்று ஆறு பேர் கொண்ட நபர்களினால் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டுள்ளார்.

மறுதினம் அவரது லயன் காம்பரா வீட்டிற்கு சென்று பார்த்த போது அவ்வீடு கொள்ளையடிக்கபட்டிருந்ததுடன் ஆகஸ்ட் 22ம் திகதி தெதிகம பொலிசில் முறைப்பாடு செய்ததுடன் தன்னை பாலியல் பலாத்காரம் செய்தவர்கள் சுனில், திலகரத்ன, ஆரியவங்ஸ, திலகே மற்றும் குலசிரி என்போர் என அடையாளங்கண்டு கொண்டதாகவும் முறைப்பாடு செய்துள்ளார். செல்வராணியால் பெயர் குறிப்பிடப்பட்ட அனைவரும் இருபத்தி நாண்கு வயதையுடைய கஸ்நாவ தோட்டத்தை அண்மித்து வாழ்ந்தவர்களாவார்கள்.

ஆகஸ்ட் 23ம் திகதி லயன் காம்பராக்கள் மீது காடையர் கூட்டம் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக அச்சங்கொண்ட தொழிலாளர்கள் வெளியேறிச் சென்றதுடன், தாக்குதலுக்கிலக்காகி காயமடைந்த அவரது மாமானாரான குருசாமி மறுநாள் மரணமடைந்தாக மத்துகம சென் ஜோர்ஜ் தோட்டத்தொழிலாளியான கே.ஏகாம்பரம் தெரிவிக்கின்றார். தன் மாமனார் இறப்பதற்கு முன்பும் இறந்த பின்னரும் பொலிசிற்கு அறிவித்தாலும் அவற்றை பொருட்படுத்தாத அவர்கள் ‘யாழ்ப்பாணத்தில் எமது பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்படும் பொழுது, ஏன் உங்களுடைய ஆட்களை கொல்வதில் என்ன தவறு” என தெரிவித்ததாக ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையில் ஏகாம்பரம் தொவித்துள்ளார். ஆகையால் எவ்வித மரண விசாரணையுமின்றி தமது மாமனாரை அடக்கஞ் செய்ய நேரிட்டுள்ளது அவருக்கு! அதேவேளை அண்மித்த லயன் காம்பராவில் வாழ்ந்த வேலு என்ற தொழிலாளி துப்பாக்கியால் சுடப்பட்டு ஏற்பட்ட காயத்தால் நாண்கு நாட்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

1981ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தமிழர் விரோத வன்முறைச் சம்பவத்தினால் விசேடமாக சபரகமுவ மாகாணத்தின் தோட்ட தொழிலாளர்கள் பாதிப்படைந்தனர். அப்போது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவராக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்திற்கெதிராக அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரனையுடன் தாக்குதல் ஆரம்பித்தது.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டிகளில் ஏறிய ஆயுததாரிகள் கஹவத்தை, றக்வானை, நிவித்திகல, பெல்மடுல்லை, பலாங்கொடை தோட்டங்களுக்குள் நுழைந்து வழமைப்போல் தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தி, சொத்துக்களுக்கு சேதம் விளைவித்து அவற்றை எரித்து, கொள்ளையடித்து. பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள், மனிதக் கொலைகள் என் அக்கிரமம் செய்தனர். 43 றப்பர் மற்றும் தேயிலை தோட்டங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களினால் 15000 தொழிலாளர்கள் இடம்பெயர்ந்தனர்.

1981 ஆகஸ்ட் 29 ஆம் திகதி இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபையினால் வெளியிட்டுள்ள அறிக்கையில் தமது சிறு குழந்தைகளை சுமந்தபடி ஆண்கள் பெண்கள் என அனைவரும் தமது உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக றப்பர் தோட்டங்களுக்கு நடுவில் பாதுகாப்பான இடங்களை நோக்கி தப்பிச் சென்றதுடன் அவர்கள் கடினமான காடுகளுக்கு மத்தியில் பலங்கொடையிலிருந்து பொகவந்தலாவை வரைக்கும் மிகச்சிரமத்துடன் நீண்ட தூரம் நடந்து வந்துள்ளரென குறிப்பிடப்பட்டுள்ளது. அன்டனி மசில்மணி தனது எட்டு வயதில் தான் முகங்கொடுக்க நேர்ந்த வன்முறைச்சம்பவமொன்றிலிருந்து மயிரிழையில் உயிர் பிழைத்த ஒருவராவார். அப்பயங்கர அனுபவத்தை முதற் தடவையாக ஊடகத்துடன் பகிர்ந்து கொள்கிறார்.

‘1981ஆம் ஆண்டு ஜூலை மாதம் கஹவத்தை புனித அன்னம்மாள் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு சுற்றத்திலுள்ள தோட்டங்களிலிருந்து 30 சிறுவர்கள் நற்கருணைக்காக வருகை தந்திருந்தனர். கஹவத்தையிலிருந்து வருகை தந்த காடையர் கூட்டமொன்று தேவாலயத்திலிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். சிறுவர்களாகிய நாங்கள் 30 பேரும் ஆலயத்தின் திருப்பீடத்திற்கு பின்னாலிருந்த அறையொன்றில் உறைந்துப் போய் அக்காட்டுமிராண்டிகள் செல்லும் வரை ஒளிந்திருந்தோம்.

அக்காடையர்கள் தங்கள் வெறித்தனத்தை நிறைவு செய்கையில் ஆலயத்தின் வழிபாட்டு உதவிகளில் ஈடுபட்டிருந்த சிறு பிள்ளையொரு வரும் மேலும் ஏழு பேர் வெட்டிக்கொலை செய்யப்பட்டிருந்தனர். ஆலயத்தின் தோட்டவளவின் ஒவ்வொரு இடங்களிலும் கிடந்த சடலங்களைப் பார்த்த அதர்ச்சியிலிருந்து இன்றும் அவர்கள் மீள முடியாதவர்களாகவே இருக்கின்றனர்.

‘பெரும்பாலும் 77ல் தோட்ட மக்கள் தாக்கப்பட்டனர். 81 மற்றும் 83 ஆம் ஆண்டு வன்முறைகளில் நகரங்களிலில் வாழ்ந்த தமிழர்களே அதிகம் தாக்கபட்டிருந்தனர் என கேகாலை அட்டால தோட்டத்திலுள்ள மனித உரிமைகளுக்கான இல்லம் (ருழஅந கழச ர்ரஅய சுபைவள) அமைப்பின் செயற்பாட்டாளரான மேகலா சன்முகம் இவ்வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும் நீதி கிடைக்கவில்லையென்கிறார்.

# மருதம் பசுமை நகர்

## Marutham Green City

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்**




A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

## உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

**0777 43 55 57**

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.09.2024இல் வெளியிடப்பெற்றது.